GOKULAM

கோகுலம்

பிப்ரவரி 2002


ரூ.6/-



திராட்சைகள் பக். 28




நிலாக் கால முக்கிய புள்ளி




எந்த இரு மீன்கள் வித்தியாசமாக உள்ளன?

விடை : 4, 5



எத்தனை பலூன்கள் உள்ளன?

விடை : 14



"ஆடு மாடு எல்லாம் ஏண்டா தரையில படுத்துக் கிடக்கு...?"

"பாவம்டா... அது 'பாயில்லா' பிராணிகள்டா."


- சு. கந்துவேல், சென்னை - 17



கோகுலம்

மலர் : 20 இதழ் : 1

பிப்ரவரி 2002



கதைகள் :


படக்கதைகள் :

அறிவியல் :

வாசகர்களின் படைப்புகள் :

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.





கார்ட்டூனை பார்த்து ரசியுங்கள்.


வலையில் சிக்கியவை!

இன்டர்நெட்டில் பொன் மொழிகளுக்கும் பஞ்சமில்லை. இதோ ஒரு பொன் மொழி. 'கப்பல், துறைமுகத்தில் இருக்கிறபோது, மிகவும் பத்திர மாகத்தான் இருக்கும். அதற்காக, துறைமுகத்திலேயே எப்போதும் கப்பல் இருந்துவிடக்கூடாது.' வாழ்க்கையும் கப்பல் போன்றதுதானே! வாழ்க்கையில் பிரச்னைகள், சவால்கள் இல்லாமல் இருக்க முடியுமா? அதற்குப் பயந்து கொண்டு, சும்மா இருந்தால் எப்படி? துணிச்சலுடன், சவால் களைச் சந்திக்க வேண்டும். திட்டமிட்டு, அவற்றை வெல்ல வேண்டும். அப்புறம் என்ன வெற்றி தான்.

துறைமுகத்திலேயே கப்பல் இருந்துவிடக் கூடாது!

அமெரிக்க மக்கள், தீவிரவாதிகளின் பயங்கரமான தாக்குதலுக்கு ஆளானாலும் கூட, தங்கள் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தும் விதம் அபாரமாக இருக்கிறது. உதாரணத்துக்கு இங்கே வெளியாகியுள்ள நகைச் சுவை யைக் குறிப்பிடலாம்.

விமானத்தைக் கண்டதும், அமெ ரிக்காவின் புகழ் பெற்ற சுதந்திரதேவி சிலை, தன் கையில் ஏந்தியுள்ள தீப்பந்தத்தையே, மட்டை போலப்பிடித்துக் கொண்டு, பதிலடி கொடுக்கத் தயாராக நிற்பது போன்ற இந்த



உங்களுக்கு, இன்று மார்க்கெட்டில் விற்கப்படும் ஏராளமான குளிர் பானங்கள் என்றால் ரொம்பவும் பிடிக்குமா? ஒரு நிமிடம். இங்கே கூறப்பட்டிருப்பதை ஒரு தரம் படித்து விட்டு, அப்புறம் முடிவு செய்யுங்கள். அதுபோன்ற குளிர் பானங்களை இனி குடிக்கலாமா? வேண் டாமா? என்பதை.

ஒரு அம்மா, மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டார். அவரைப் பரி சோதித்த டாக்டர்கள், அவரது இரண்டு சிறு நீரகங்களும் பழுதடைந் திருப்பதால், உயிருக்கே ஆபத்து என்று கண்டு பிடித்தனர். ஒரே வாரத்தில் அந்தப் பெண்மணி இறந்து போனார். அவரது சிறுநீரக பாதிப்புக்கு என்ன காரணம் தெரியுமா? அவர்



தினமும் காலை, மதியம், மாலை என்று மூன்று வேளையும், எதைச் சாப்பிட்டாலும், கூடவே நிறைய குளிர்பானங்களைச் சாப் பிட்டார் என்பதுதான்.

உங்கள் வீட்டு டாய்லெட்டில் மிகவும் அழுக்குக்கறை படிந்திருந்தால், சோப்புத் தண்ணீர் அல்லது அமிலம் ஊற்றிக் கழுவுவீர்கள் அல்லவா? அதற்குப் பதிலாக, இந்தக் குளிர் பானங்களை ஊற்றி, சிறிது நேரம் ஊற விடுங்கள். டாய்லெட் பளிச்! குளிர்பானத்தில் இருக்கிற அமிலம்தான் இந்தப் பளிச்சுக்குக் காரணம்.

துணியில் எண்ணெய் அல்லது மிஷின் களுக்குப் போடுகிற கிரீஸ் கறைப் படிந்து விட்டால், அங்கே குளிர் பானத்தை ஊற்றிக் கசக்கித் தோய்த்துப் பாருங்கள். கறை அகன்று விடும்..

இதுபோன்ற குளிர்பானங்களை அதிக மாகக் குடிப்பதால், அதில் கரைந்துள்ள கார்பன்-டை-ஆக்ஸைடு அதிகமாக உங்கள் உடலுக்குள் சென்று, ஆபத்தை விளை விக்கும்.

ஒரு குளிர்பான பாட்டிலின் உள்ளே ஒரு உடைந்த பல் ஒன்றைப் போட்டு, பத்து நாட் கள் அப்படியே வைத்து விடுங்கள். அப்புறம் பாட்டிலின் உள்ளே பல்லைத் தேடினால், இருக்காது. குளிர் பானத்தின் அமிலம் உறுதியான பல்லையும் கரைத்து விடும் தன்மை கொண்டது.

சீரியஸான ஒரு விஷயத்தைப் படித்துவிட்டு, ஒரு ஜோக் படித்து சிரியுங்களேன்.

ஹோட்டலுக்கு கஸ்டமர் ஒருவர் வந்தார். ஒரு மேஜையைத் தேர்ந் தெடுத்து அமர்ந்தவுடன், அதி காரத்துடன் சர்வரைக் கூப்பிட்டார்

"என்ன ஹோட்டல் இது! ஒரே புழுக்கம்! ஏ.சி.யைப் போடு!" என்றார்.

"இதோ போடுகிறேன் சார்!" என்றார் சர்வர்.

அடுத்த சில நிமி டங்களில், "ஊகூம். குளிர்ச்சி போதவில்லை. ஏ.சி.யை இன்னும் அதிக மாக்கு!" என்றார் உரத்த குரலில்.

பொறுமையாகத் தலையாட்டினார் சர்வர்.

சில நிமிடங்கள் சென்றதும், மறுபடியும் சர்வரைக் கூப்பிட்டார்.

"ரொம்பக் குளிருதே! ஏ.சி. வேண்டாம். நிறுத்திவிடு" என்றார்.

இதற்கும் பொறுமையாய் தலையசைத் தார் சர்வர்.

இதையெல்லாம் பார்த்துக் கொண் டிருந்தார் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த இன்னொருவர். சர்வரை அழைத்தார். "ஏங்க! அந்த மனுஷன் ரொம்ப எரிச்சலூட்டுகிறானே! நறுக்கென்று நாலு வார்த்தை முகத்தில் அடித்தாற்போல் கேட்டுவிட வேண்டியதுதானே!" என்றார்.

அதற்குப் பொறுமையாக அந்த சர்வர் பதில் சொன்னார் : "என்ன வேண்டு மானாலும் சொல்லிவிட்டுப் போகட்டும். நான் கண்டு கொள்ளவே மாட்டேன். கார ணம், எங்கள் ஹோட்டலில்தான் ஏ.சி.யே இல் லையே!"

- கௌதம் ராம்





வாய்க்குள் விழுந்த 100 ஒட்டகங்கள்!

குப்பன் முத்தன் இருவரும் நண்பர்கள். குப்பன் விவசாயம் செய்து வந்தான். முத்தனோ வியாபாரம் செய்தான். முத்தன் தனது பேச்சுத் திறமையால் மற்றவர்களை எளிதில் ஏமாற்றி விடுவான். குப்பன் புத்திசாலி மட்டுமன்றி நல்லவனும்கூட.

குப்பனும் முத்தனும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது முத்தன் "நாம் இருவரும் தலா ஒரு கதை சொல்வோம். அதைக் கேட்டு, யார் 'அப்படியா?' என்று ஆச்சர்யப்படுகிறார்களோ அவர்கள் கதை சொன்னவர்க்கு நூறு ரூபாய் தர வேண்டும்" என்றான்.

குப்பனும் இதற்குச் சம்மதித்தான். குப்பனை எளிதில் ஏமாற்றி விடலாம் என்று எண்ணி முத்தன் கதை சொல்ல ஆரம்பித்தான். "ஒருநாள் சாலையில் நடந்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு வணிகன் ஒன்றன்பின் ஒன்றாக நூறு ஒட்டகங்களை ஒரே கயிற்றில் இழுத்து வந்தான். அந்தக் கயிறு சுமார் ஒரு மைல் தூரம் இருக்கும்" என்று நிறுத்தினான் முத்தன். குப்பன் ஆச்சரியப்பட்டதாகத் தெரியவில்லை. "அதுக்கப்புறம்?" என்று கேட்டான் குப்பன்.

முத்தன் கதையைத் தொடர்ந்தான்: "அப்போது அங்கு வந்த கழுகு நூறு ஒட்டகங்களைத் தூக்கிச் சென்றுவிட்டது" என்று கூறி குப்பனைப் பார்த்தான். அப்போதும் குப்பன் சிறிதும் ஆச்சரியப்படவில்லை. முத்தன் கதையைத் தொடர்ந்தான். "கழுகு ஒட்டகங்களைத் தூக்கிச் சென்றதைப் பார்த்தவாறு கீழே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அப்போது கழுகின் பிடியிலிருந்து ஒட்டகங்கள் நூறும் அந்தப் பெண்ணின் வாய்க்குள் விழுந்து விட்டன. அவளும் நூறு ஒட்டகங்களையும் விழுங்கிவிட்டாள்" என்று முத்தன் கதையை முடித்தான். அப்போதும் குப்பன் ஆச்சரியப்படாததால் முத்தன் தனது தோல்வியை ஒத்துக் கொண்டான். நூறு ரூபாயையும் கொடுத்தான்.

இப்போது குப்பன் கதை சொல்ல ஆரம்பித்தான். "என் அப்பாவின் குதிரையின் முதுகில் உள்ளங்கை அளவிற்குப் பள்ளம் இருந்தது. அதில் என் அப்பா நெல் விதைத்திருந்தார். அது நன்கு அடர்ந்து விளைந்தது" என்று கூறி நிறுத்தினான். இழந்த ரூபாயைப் பெற்றுவிடும் எண்ணத்தில் அமைதியாக உட்கார்ந்திருந்தான் முத்தன். கதையை மீண்டும் ஆரம்பித்தான் குப்பன். "அதை அறுவடை செய்ய இருபது ஆட்கள் தேவைப்பட்டனர். மொத்தமாக நாற்பது மூட்டை நெல் விளைந்தது. அதில் உன் அப்பா என் அப்பாவிடம் 5 மூட்டை நெல்லைக் கடனாகப் பெற்று இன்றுவரை திருப்பித் தரவில்லை. நீதான் ஐந்து மூட்டை நெல்லைக் கொடுக்க வேண்டும்" என்றான். இனிமேல் 'அப்படியா?' என்று கேட்காவிட்டால் 5 மூட்டை நெல்லை இழக்க வேண்டி வரும் என்று எண்ணிய முத்தன் "அப்படியா?" என்றான். தனது தோல்வியை ஒத்துக்கொண்டு குப்பனுக்கு மேலும் நூறு ரூபாயை அழுதபடியே கொடுத்தான் முத்தன்.

- நா. பாண்டியம்மாள்
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி,
இராமநாதபுரம்.

30.11.2001 அன்று கோகுலம், ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளியில் கதைப் போட்டி நடத்தியது. மூன்று பரிசுகள் வழங்கப்பட்டன. முதல் பரிசு பெற்ற கதை இங்கு பிரசுரமாகியுள்ளது.



* குடியரசுத் தலைவரிடம் விருது வாங்கியபோது...

உதய்ராஜ் தெரியுமா என்று கேட்டால் யார் என்று யோசிப்பீர்கள். 'புள்ளி' என்றால் சட்டென அடையாளம் கண்டு கொள்வீர்கள். நிலாக்காலம் படத்தில் மூன்று குழந்தைகளில் முக்கியமான பாத்திரத்தில் நடித்த புள்ளி, இன்று நாடெங்கும் அறியபட்டு, பரபரப்பாகப் பேசப்பட்டிருக்கிறான். அது குழந்தைகளின் பிரச்னைகளை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம். அந்தப் படத்தின் இறுதிக் காட்சியில் அப்பாவித்தனமும் குழந்தைத்தனமும் கலந்த அற்புதமான நடிப்புதான் இன்று தேசிய விருதை அவனுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறது.


புள்ளியைச் சந்தியுங்கள்.

பெயர் : *உதய்ராஜ். நிலாக்காலம் படத்திற்குப் பின் 'புள்ளி'. வீட்டில் செல்லமாக 'உதய்'.*

வயது : *9*

படிப்பு : *சென்னை, ராமலிங்கா அரசினர் உயர்நிலைப் பள்ளியில் நான்காம் வகுப்பு. படிப்பில் சராசரி. பள்ளி நாட்களில் அடிக்கடி ஷூட்டிங் செல்வதால் பாடத்தை பிக்அப் செய்ய வீட்டில் டியூசனும் உண்டு.*

விளையாட்டு : *விளையாட்டு என்றால் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அதிலும் ஓட்டப் பந்தயம் என்றால் அல்வா மாதிரி. பள்ளியில் நிறைய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளைக் குவித்திருக்கிறேன்.*



பொழுதுபோக்கு : வீட்டில் இருந்தால் வீடியோ கேம்ஸ், அக்கம் பக்கத்திலுள்ள நண்பர்களிடம் விளையாடுதல்...

வீட்டைப் பற்றி... : அம்மா, அப்பா, நான், அண்ணன், தங்கை என ஐந்து பேர். அப்பா திரைப்படத்துறையில் பணியாற்றியதால் என் அண்ணன் முதலில் நடித்தான். பிறகு நான், இப்போது என் தங்கையும் நடிக்கிறாள்.

நடிக்க ஆரம்பித்தது எப்போது? : எனக்கு மூன்று வயதாக இருக்கும்போதே நடிக்க ஆரம்பித்து விட்டேனாம். ஆறு வருடங்களாக நடித்து வருகிறேன்.

நிலாக்காலம் அனுபவம்? : நிலாக்காலம் படத்துக்கு முன்பே நான் நிறைய நடித்திருக்கிறேன். விஜய் போன்ற ஹீரோவுக்கு ஃபிளாஷ்பேக் காட்சிகளில் சிறு வயது ஹீரோவாக நான் நடித்திருக்கிறேன். ஆனால் நிலாக்காலம் படம்தான் என் நடிப்பை முழுவதுமாக வெளிக்கொண்டு வந்தது. எல்லோருக்கும் என்னை அறியச் செய்தது. சிறுவர்களை மையமாக வைத்து எடுத்த படம். என்னுடன் இன்னும் இரண்டு சிறுவர்கள் நடித்ததால் ஷூட்டிங் ஜாலியாக இருந்தது.

நடிப்பு பிடித்திருக்கிறதா? : ரொம்பப் பிடிச்சிருக்கு. இரவு பன்னிரண்டு மணிக்குப் படுக்கப் போய் அதிகாலை மூன்று மணிக்குக்கூட ஷூட்டிங் சென்றிருக்கிறேன் என்றால் என் ஆர்வம் உங்களுக்கே புரியும்.

விருது அனுபவம் : படத்தைப் பார்த்து விட்டு பத்திரிகைகள், பெரியவர்கள் எல்லாம் எனக்கு விருது கிடைக்கும் என்று பாராட்டினர். அதேபோல் சென்ற ஆண்டுக்கான சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான தேசிய விருது கிடைத்தது. எனக்கு சந்தோஷமாக இருந்தது. குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்களும், சுஷ்மா சுவராஜ் அவர்களும் விருது வழங்கியபோது தட்டிக் கொடுத்து பாராட்டியதை மறக்க முடியாது. விருதுக்குப் பின் எங்கள் பள்ளியில் தனி மரியாதைதான் எனக்கு. எனக்கென்று ஒரு விழா நடத்தினார்கள்.

என்னென்ன தெரியும்? : தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் தெரியும். டான்ஸ் தெரியும்.

உதய்ராஜ் எப்படி? : நான் ரொம்ப 'வால்'பையன். எப்பொழுதும் துறுதுறுவென்று இருப்பேன். அண்ணா, தங்கையுடன் சண்டையெல்லாம் போடுவேன். விளையாட்டுப் பொருள்களைக் கேட்டு அடம் பிடிப்பேன்.

சினிமா பார்ப்பது உண்டா? : என்னுடைய படங்களைக் கூட நான் அதிகம் பார்ப்பது கிடையாது. நடிப்பைப் பற்றி தெரிந்து கொள்ள எப்போதாவது எம்.ஜி.ஆர்., சிவாஜி, கமல், ரஜினி படங்களைப் பார்ப்பேன்.

எதிர்கால லட்சியம்? : நடிப்பில் தேசிய விருது வாங்கினாலும்கூட என் எதிர்கால லட்சியம் சிறந்த 'காமிராமேன்' ஆக உருவாவதுதான்.

உழைப்பும் தன்னம்பிக்கையும் கொண்டு ஒன்பது வயதிலேயே சாதித்த உதய்ராஜின் லட்சியம் நிறைவேறி சிறந்த காமிராமேனாக உருவாக வாழ்த்துவோம்!

அட்டையில் : **உதய்ராஜ்**
வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

நான் வால் பையன்!



* 'நிலாக்காலம்' படத்தில்...

பரிசு ரூ.100/-



பரிசு ரூ.15/-



"உங்க மாமாவோட லெட்டரைப் படிச்சா தும்மலா வருமா... ஏண்டா?"

"நிறையப் பொடி வச்சு எழுதுவாரே!"

- நியாஸ்


கலகலவென்று சிரி!

பரிசு ரூ.50/-

"ஏங்க பையனைப் போட்டு இந்த அடி அடிக்கிறீங்க?"


"99 மார்க் எடுத்த பயலுக்கு ஒரு மார்க் எடுக்கத் தெரியலையே?"

- காயக்காடு ராமகிருஷ்ணன்



ஜோக்ஸ் அனுப்புங்கள், பரிசுகளை வெல்லுங்கள்!





பரிசு
ரூ.25/-

"'பயம்'ங்கற வார்த்தையே என்னோட அகராதியிலேயே கிடையாது!"

"அடப்பாவமே! அதைத் திருப்பிக் கொடுத்துட்டு வேற அகராதி வாங்க வேண்டியதுதானே?"

- ஆர். குட்டி பிரசன்னா

"நம்ம சார் முன்னாடி துணிக் கடை வெச்சிருந்தாரோ?"

"ஏன் கேட்கிறே?"

"இல்லை, 100 மார்க் போட்டு 10% தள்ளுபடின்னு 90 மார்க் போடறாரு!"

- சாய் கணேஷ்

பரிசு ரூ.15/-



சீடனின் துரோகம்

கதை: கணேசன் படம்: சேகர்





தினமும் கடுமையாகப் பயிற்சி செய்து வித்தைகளைக் கற்றுக் கொண்டான் சிகாமணி.
எல்லாவற்றையும் குருவிடமிருந்து கற்றுக் கொண்டேன். இனி இவர் தயவு தேவையில்லை.
மறுநாள்—
குருவே, என்னுடன் மோதத் தயாரா நீங்கள்?
என்ன? பேச்செல்லாம் ஒரு மாதிரியாக இருக்கிறதே?
உங்களைவிட நான் சிறப்பாகச் செய்கிறேன். என்னிடம் மோதி, தோற்று நீங்கள் அவமானப்பட வேண்டும்.
அப்படியா! உன்னைப் போல் எத்தனை பேரைப் பார்த்திருப்பேன். இப்படி நீ செய்வேன்னு எனக்கு முதலிலேயே தெரியும்.
என் பாதுகாப்புக்காக உனக்குக் கற்றுத்தராதது 'காட்டாகுஸ்தி!' இதை உன்மேல பிரயோகிச்சால் அப்புறம் நீ நடமாடவே முடியாது.
ஐயோ, அம்மா!

கபடி... கபடி...


"தமிழ்த் திரைப்படங்களில் கபடி விளையாடுவது போன்ற காட்சிகள் வரும் போது ஒரு விஷயத்தை நீங்கள் கவனித்திருக்கலாம். தன் பக்கத்திலிருந்து எதிரணியின் பக்கம் 'கபடி.... கபடி.... கபடி....' என்று நடுக்கோட்டைத் தாண்டிச் செல்லும்



• சதீஷ்

ஹீரோவை எதிரணியினர் அமுக்கிப் பிடித்துவிடுவார்கள். ஆனால் மாட்டிக் கொண்டவர் ஹீரோவல்லவா! அதனால் மூச்சு விடாமல் இரண்டு, மூன்று நிமிடங்களுக்கு மேல் 'கபடி.... கபடி' என்று சொல்லிக்கொண்டு, தன் உடல் வலிமையை முழுவதுமாகப் பயன்படுத்தி, முக்கி, முனகி, நடுக்கோட்டைத் தொட்டுவிடுவார். கைதட்டல் அதிர வைக்கும். இது போன்ற காட்சிகளை உண்மையான கபடி விளையாட்டில் எதிர்பார்த்துப் போனால் ஏமாற்றமடைவீர்கள்'' என்று சொல்லிச் சிரிக்கிறார் கபடி வீரர் சதீஷ். சென்னை பல்கலைக் கழகம் மற்றும் தமிழ் நாட்டிற்காக விளையாடி இருக்கிறார் சதீஷ்.

"எதிரணியின் பக்கம் போகும் வீரர் அந்தப் பக்கம் ஒரு வீரரைத் தொட்டு அவுட்டாக்கினாலோ அல்லது பிடிபட்டாலோ இல்லை, இந்த இரண்டும் இல்லாமல், எதிரணி பக்கம் ஒரு ரவுண்டு போய் வந்தாலோ, அவர் எடுத்துக் கொள்ளக்கூடிய நேரம் அதிகபட்சமாக முப்பது விநாடிகள்தான். எனவே அவர் மூச்சைப் பிடித்துக் கொண்டு அதிகபட்சமாக 'கபடி' சொல்ல வேண்டியது அரை நிமிடம்தான். அதற்குள் பிடிபட்டால் கோட்டைத் தொட்டு விட வேண்டும்... மேலும் திரைப்படங்களில், 'பள்ளஞ் சடுகுடு' என்றும் 'வாடி அம்மா வாடி' என்றும் பாட்டுப் பாடிக்கொண்டே விளையாடுகிறார்கள். கபடியைப் பொறுத்த மட்டில் அங்கீகரிக்கப்பட்ட, சொல் 'கபடி.... கபடி'தானே தவிர வேறெதுவும் கிடையாது'' என்கிறார் சதீஷ்.





தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று கபடி என்கிறார்கள். இன்றும் தமிழக கிராமங்களில் பொங்கல் பண்டிகையின் போது 'கபடி' போட்டிகள் நடக்கின்றன. அந்தக் காலத்தில் மன்னர் முன் மற்போர் நடக்கும். மல்யுத்த வீரர்கள் மோதுவார்கள். மற்போர் என்றால், ஒருவருக்கொருவர் மோதுவதுதானே தவிர, அது ஒரு குழுப் போட்டி அல்ல. எனவே காலப்போக்கில் ஒரு ஆட்டக் களத்தை ஏற்படுத்தி, குழுக்களிடையே மற்போர் என்று துவங்கி, அது ஒரு கட்டத்தில் கபடி விளையாட்டாக மாறியிருக்க வேண்டும் என்று ஒரு குறிப்பு உண்டு. எப்படியிருந்தாலும்

கபடி வீரருக்கு மிக அவசியமான தேவை மூச்சுப் பயிற்சியும் உடல் வலிமையும்தான். வீரர்கள் தினசரி உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

கபடி விளையாட்டில் ஒரு அணியில் ஏழு பேர் விளையாடுவார்கள். ஐந்து பேர் ரிசர்வில் இருப்பார்கள். ஆட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, ரிசர்வில் இருப்பவர்களில் அதிக பட்சம் மூன்று வீரர்களை இருமுறை மாற்றிக் கொள்ளலாம். மொத்த ஆட்ட நேரம் 40 நிமிடங்கள்.





முதல் இருபது நிமிடங்களுக்குப் பிறகு ஐந்து நிமிடம் ஓய்வு உண்டு. நடுக் கோட்டை அடுத்து, இரண்டு பக்கமும் இருக்கும் கோட்டுக்குப் பெயர் பாக் லைன். இந்தக் கோட்டை தமிழில் ஏர்குந்தம் என்று சொல்கிறார்கள். அதையடுத்து, 'போனஸ் லைன்' என்று சொல்லப்படும் கோடு உள்ளது. ஆரம்ப காலத்தில் இந்தக் கோடு கிடையாது. இப்போது தான் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. எதிரணி வீரர் கபடி சொல்லிக் கொண்டு வரும்போது, அவரை மடக்கும் வேகத்தில் ஒரு வீரர் தப்பித் தவறி நடுக் கோட்டைத் தொட்டு விட்டால் 'அவுட்' ஆகக் கருதப்படுவார்.

அதேபோல் ஒரு வீரரைப் பிடித்துத் தன் கோர்ட்டுக்குள் அமுக்கும் போது பிடிபட்ட வீரரின் வாயைப் பொத்த முயற்சிக்கக் கூடாது. வீரர் எதிரணியை நோக்கிச் செல்லும்போது, நடுக்கோட்டைத் தாண்டுவதற்கு முன்னரே, 'கபடி' சொல்லத் துவங்கி விட வேண்டும். இல்லையேல் அவர் அவுட். அதேபோல் வீரர் ஒவ்வொரு முறை எதிரணியின் பகுதிக்குப் போகும் போது கட்டாயம் ஏர்குந்தம் கோட்டைத் தொட்டுவிட்டுத்தான் வர வேண்டும். எதிரணி வீரர்களைத் தொட்டு அவுட்டாக்கி விட்டு வருவதில் பல யுக்திகள் இருக்கின்றன. சைட் கிக், கிராஸ் கிக், ரோல் கிக், ஏரோ கிக் என்று பல அதிரடி ஆக்ஷன்கள் இருக்கின்றன. அதேபோல ஒரு வீரரை மடக்கிப் பிடிக்க, ரிஸ்ட்கேட்ச், வாஷர்மேன்ஸ் கேட்ச், டிரங்க் கேட்ச் என்று பல யுக்திகள் உண்டு. தமிழக கபடி அணிகளில் பெண்கள் அணி

யும் உண்டு.

"ஒரு கபடி வீரர் தன் உடலை நூறு சதவீதம் தகுதி வாய்ந்ததாக வைத்துக் கொள்ள வேண்டும்" என்கிறார் சதீஷ். மற்ற விளையாட்டுகளில் அடிபடும் அவ்வளவு தான். ஆனால் கபடி விளையாட்டில் அடி படுவதற்காகவே ஆடுகிறோம் என்றால் மிகையாகாது. ஒரு காலத்தில் கபடி விளை யாட்டில், இந்திய அணியில் தமிழக வீரர்கள் ஐந்து பேர் இருந்தனர். ஆனால் தற்போது ஒருவரும் இல்லை" என்று வருத்தத்துடன் சொல்கிறார் சதீஷ். விளையாட்டில் மிக உயர்ந்த பட்ச விருது அர்ஜுனா விருதாகும். தமிழக கபடி வீரர்களான ராஜரத்னம் மற்றும் மணத்தி கணேசன் ஆகியோர் அர்ஜுனா விருது பெற்றவர்கள். இருந்தாலும் இன்று தமிழ்நாட்டில் கபடி விளையாட்டைக் கவனிப்பார் இல்லை. மற்ற எல்லா விளை யாட்டுகளுக்கும் பொறுப்பான சங்கங்கள் தமிழகத் தலைநகர் சென்னையில் அமைந் திருக்க கபடி சங்கம் மட்டும் வேலூரில் அமைந்திருக்கிறது. இந்த விளையாட்டுக் குக் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம் இதிலிருந்து புரியும். இது தவிர ஜாதிச் சண்டைகள், போட்டி, பொறாமை என்று சங்கமே பிளவுபட்டு இருக்கிறது. இதன் விளைவு என்னவென்றால் ஒரு காலத்தில் தேசிய அளவில் கொடி கட்டிப் பறந்த தமிழக அணி இன்று பின் தள்ளப்பட்டு ஹரியானா, கர்நாடகம், ஆகிய அணிகள் முன்னணிக்கு வந்து விட்டன. "கபடி ஏழை கள் விளையாடும் ஆட்டம். சமுதாயத்தில் வசதி படைத்தவர்கள் இந்த ஆட்டத்தில் பங்கு பெற வருவதில்லை. எனவே இயல் பாகவே உயர் நிலையில் இருப்பவர்களின் ஆதரவு கிடைப்பதில்லை. ஹைதராபாத் தில் கபடிக்கென்று தனி ஸ்டேடியமே உண்டு. ஆனால் தமிழகத்தில் கிடையாது. ஹாக்கி, கால்பந்து மைதானங்களில்தான் பிராக்டீஸ் செய்ய வேண்டும்."


"துரதிஷ்டவசமாக, தமிழக அரசின் வேலை வாய்ப்பில், விளையாட்டு வீரர் களுக்கு கோட்டா கிடையாது என்று அறி வித்து விட்டார்கள். இது எங்களுக்குப் பெரிய அடி. இந்த முடிவை மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டும்" என்று சொல்கிறார் சதீஷ். வேலை கிடைக்காத விரக்தியில் பல நல்ல கபடி வீரர்கள், விளையாட்டுப் பயிற்சியை விட்டு, விட்டு வேறு வேலையில் நாட்டம் காட்டத் துவங்கி விட்டார்களாம்.

இது ஒரு பக்கம் இருக்க, கபடிப் போட் டிகள் ஆசிய அளவில்தான் நடைபெறு கின்றன. இன்னமும் ஒலிம்பிக் விளையாட் டுகளில் கபடி சேர்க்கப்படவில்லை. உலக அளவிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆசிய நாடுகளில் கூட, எட்டு நாடுகள்தான் ஏஷியன் கேம்ஸ் போட்டிகளில் கலந்து கொள்கின்றன. இந்தியாவும், பாகிஸ்தானும் கபடியைப் பொறுத்தவரை பரம்பரை எதிரிகள். இதுவரை இந்தியாவின் கைதான் ஓங்கி இருக்கிறது. "கபடி விளையாட்டுக்கு தமிழகத்தில் ஊக்கம் கொடுத்து தேசிய அளவில் தமிழகம் விருதுகள் பெறுவதற்கு வழிகாட்டியதில் மறைந்த சி.பா. ஆதித் தனார் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. இன்று அது போன்ற ஒரு ஆதர வுக்காக ஏங்குகிறார்கள் தமிழக கபடி வீரர்கள். அப்படியொரு ஆதரவு கிடைக்கா விட்டால், வீர விளையாட்டான கபடி, தமி ழகத்தில் இனி மெல்ல அழிந்து விடும் ஆபத்து இருக்கிறது" என்று வருத்தத் துடன் சொல்கிறார் சதீஷ்.

— ப்ரியன்

படங்கள்: ராஜன்

ஹா...ஹா...



பரமசிவம் என்ற பணக்காரர் ஒரு துறவியையும் அவரது சீடர்களையும் தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தார். விருந்து அமர்க்களமாக இருந்தது. துறவியும், சீடர்களும் விருந்து முடிந்த பிறகு, அந்தப் பணக்காரரிடம் விருந்துக்கு நன்றி தெரிவித்து விட்டு ஆசிரமத்துக்குக் கிளம்பினார்கள்.

கொஞ்ச தூரம் சென்றதும், சீடர்களிலேயே மிகவும் இளையவராக இருந்தவர் சுவாமிஜியிடம் வந்து, "குருவே! என்னை மன்னிக்க வேண்டும். நான் ஒரு தப்பு பண்ணிவிட்டேன்" என்றார்.

அதற்குத் துறவி, "வருத்தப்படாதே சீடா! நடந்ததைக் கூறு" என்றார்.

தன் பையிலிருந்து ஒரு வெள்ளிக் கரண்டியை எடுத்துக் காட்டி,

உணவின் மகிமை!

"குருவே! விருந்தின் போது அவர்கள் வீட்டிலிருந்து இந்த வெள்ளிக் கரண்டியைத் திருடி விட்டேன்" என்றார் சீடர்.

குருவோ, "நீ இப்போதுதான் ஆசிரமத்தில் சேர்ந்திருப்பதால் இன்னும் மனப்பக்குவம் அடையவில்லை. இந்தக் கரண்டியை அந்தப் பணக்காரர் வீட்டில் கொடுத்து விட்டு அவரிடம் மன்னிப்புக் கேட்டு வா" என்று அனுப்பினார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மற்ற சீடர்களுக்குக் குரு அந்தச் சீடனிடம் கடுமையாக நடந்துக் கொள்ளாதது குறித்து வியப்பு. ஒரு சீடர் குருவிடம் அதைப் பற்றிக் கேட்டு விட்டார்.

அதற்கு குரு, "அந்தக் கரண்டியைத் திருடியதற்கு அவன் மட்டும் காரணம் அல்ல. விருந்து வைத்த பணக்காரர் சம்பாதித்த பணம் நேர்மையான முறையில் சம்பாதித்தது அல்ல. நிறைய வட்டி வாங்கி ஏழைகளை வருத்தி பணம் குவித்துள்ளார். அது திருட்டு முறையில் சம்பாதித்தது போன்றதுதான். அவர் படைத்த உணவு அந்தப் பணத்திலிருந்து பெறப்பட்டதால் நாம் உண்ட உணவிலும் அந்த எண்ணம் கலந்து விட்டது. இந்தச் சீடர் இப்போதுதான் நம்மிடம் சேர்ந்திருப்பதால் மனதை அடக்கி ஆளும் குணம் இன்னும் வரவில்லை. நாம் எல்லாம் தவ வலிமைக்குக் கட்டுப்பட்டு விட்டதால் இந்தத் திருடும் உணர்வு நம்மை அணுகவில்லை. எனவேதான் அவனை மன்னித்தேன்" என்றார். மற்ற சீடர்கள் குருவின் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

- ஆர். சாரதா, சென்னை.







மிகப் பெரிய சிலை!

பெரிய சிலை!

உலகிலேயே மிகப் பெரிய புத்தர் சிலை சீனாவில் உள்ள ஷென்யாங் நகரில் நிறுவப்பட்டுள்ளது. இந்தச் சிலையின் எடை 7 டன். சிரித்த முகத்துடன் கூடிய இந்தப் புத்தர் சிலை 11 கைவினைக் கலைஞர்களின் மூலம் 12 மாதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. மரகதக் கற்களைக் கொண்ட இச்சிலையின் மதிப்பு 7 கோடி.

யூரோ கரன்சி

ஐரோப்பிய யூனியனில் அமைந்த பல நாடுகளில் 2002 புத்தாண்டு தினத்தன்று புதிய யூரோ கரன்சி அமலுக்கு வந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக முயற்சி மேற்கொள்ளப்பட்டு இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ஃபிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், லக்சம்பர்க், ஆஸ்திரியா, கிரீஸ், பின்லாந்து ஆகிய நாடுகள் யூரோவை ஏற்றுக்கொண்டுவிட்டன. இன்னமும் பிரிட்டன் முறையாக அங்கீகாரம் தரவில்லை. 'யூரோ' அமல் ஆனதும் இது நாள் வரை இருந்த டாயிஷ்மார்க், லிரா, ஃபிராங்க் ஆகிய கரன்சிகள் இனி பயன்படுத்தப்பட மாட்டாது. கிட்டத்தட்ட 34 கோடி மக்கள் யூரோவைப் பயன்படுத்த உள்ளனர். யூரோ வரும் காலத்தில் அமெரிக்க டாலருக்குப் போட்டியாக மாறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.


உணவுக் கலவரம்

அர்ஜெண்டினா நாட்டில் உணவுக் கலவரம் வெடித்திருக்கிறது. கடைகளையும் தானியக் கிடங்குகளையும் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று உடைத்து, திறந்து சூறையாடினர். இதனால் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது. அன்னியக் கடன் சுமை அதிகரித்து விட்டதால் அந்நாட்டுப் பொருளாதாரம் சீரழிந்து விட்டது. அந்நாட்டுச் செலாவணிக்கு மதிப்பே இல்லாமல் போய்விட்டது. தொழில், வர்த்தகம் தேக்க நிலையை அடைந்துவிட்டது. பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்ததால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டது. சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்காமல் மக்கள் பட்டினியோடு இருக்கின்றனர்.

ரயில் நிறுத்தம்

கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் தீவிரவாதிகள் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலை நடத்தியவர்கள் பாகிஸ்தான் தீவிரவாதிகள் என்று கண்டறியப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான ரயில், பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிட்டது.

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. எம்மதமும் சம்மதம் என்ற கருத்தை வலியுறுத்திய முகலாய மன்னர் (4)
3. படி இல்லாத மாடி, மரங்களில் ஏற இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். (2)
4. தானியங்களில் ஒன்று. உடல் நிலை சரியில்லாத போது இதன் தண்ணீரைப் பருகுவர் (3)
8. எவரெஸ்ட் என்பது ________ (4)
10. நடந்து செல்பவர் (4)
13. மின் கம்பிகள் இந்த உலோகத்தால் ஆனது (4)

வலமிருந்து இடம்

2. 'திக்... திக்' கதைகளில் அவிழ்க்கப்படாத முடிச்சு (4)
5. அடைக்கலம் (4)
6. சூரியன் உதிக்கும் நேரம் (2)
7. சாதம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)
9. நரி ________ இடும் (2)
11. சுமை (3)
12. அன்றாடம் செய்யும் வேலைக்கு ஏற்ப கிடைக்கும் ஊதியம் ________ (2)
14. அணு பற்றிய கருத்தை முதன் முதலாக வெளியிட்டவர் (4)

மேலிருந்து கீழ்


1. ஒரு செல் உயிரி (3)
2. உரலுக்கு ஒரு பக்கம் இடி; இதுக்கு இரண்டு பக்கமும் இடி (5)
11. சீனக்கரடி (3)
12. ஔவைக்கு முதுகில் ________ விழுந்திருக்கும் (2)

கீழிருந்து மேல்

3. நிலம் உழப் பயன்படும் சாதனம் (2)
7. கடலில் இது ஓயாது (2)
9. துணி தைக்க உதவும் இது (2)
13. விசேஷங்களுக்கு இந்தப் பெரிய தட்டில்தான் தேங்காய், பழம், பூ போன்றவற்றை வைப்பார்கள் (5)

- பா. சசிகலா, பத்தாம் வகுப்பு,
உமா மகளிர் உயர்நிலைப் பள்ளி,
திருச்சிற்றம்பலம்.

விடை 20 ஆம் பக்கம்



பள்ளி விடுமுறை நாளில் அந்த மாண வர்கள் மலையடிவாரத்தில் வசிக்கும் ஆதி வாசிச் சிறுவன் நீலனைப் பார்க்க வந் திருந்தனர்.

''வாங்க சாமிகளா, உட்காருங்க. ஆளுக் குக் கொஞ்சம் தேன் சாப்பிடுங்களேன்'' - நீலன்.


நீலன் குடிசைக்குள் சென்று தேன் பாட் டிலோடு வந்தான். பாறையில் அமர்ந் திருந்த மாணவர்களுக்குக் கைகளில் கொஞ்சம் தேன் ஊற்றினான்.

அவர்கள் தேனை ருசி பார்த்துவிட்டு ''ஆகா! அற்புத ருசியா இருக்கே'' என்றனர்.

''சரி நீலா, எங்களை மேல எங்கேயாவது கூட்டிட்டுப் போயி மிருகங்களைக் காட் டேன்'' என்றான் அமுதன்.

''சரி வாங்க போகலாம். யானைக் கூட்டம் இறங்கியிருக்கு. நடு மலைக்குப்

புலிக்குப்



பயந்த யானைகள்!

கொ.மா. கோதண்டம்

''எப்படியும் சாயந்திரம் அஞ்சு மணிக்குள்ளே திரும்பிடலாமா?'' கணேசன் கேட்டான்.

''திரும்பிடலாம்'' - நீலன்


'''சரி! நீலா வடக்கு மலைக்கு மேலே ஏறிப் பார்த்தால் என்ன தெரியும்?'' என்று முருகேசன் கேட்டான்.

''சாமி இந்த மலையில இந்த இருப்க்கம்தான் நம்ம நாட்டுது. மேற்கே போகப் போக மலைக்காடுகள்தான் எல்லாமும். அது மலையாள நாட்டுக்குச் சொந்தம். ஆனால் வடக்கே இறங்குனா காண்சாபுரம், வத்ராயிருப்பு ஊருகள் வந்துடும்.''

''என்னப்பா ஊர்ல இருந்து வத்திராயிருப்பு 30 கி.மீக்கும் அதிக தூரமில்லை. இறங்குனா வந்திருங்கிறே?'' வியந்து கேட்டான் கண்ணன். ''ஆமா சாமி பாதை சுத்திப் போவுது. மலைக்கு அடுத்தாப்புல அந்த ஊருக இருக்கு. ஏறி இறங்குனா பக்கந்தான்.''

போனா பாரஸ்டுகாரங்க மரத்துல மாடம் கட்டியிருக்காங்க. அதுல ஏறி இருந்தோமின்னா யானைகளைப் பார்க்கலாம். கொஞ்சம் நேரமாகும். அவ்வளவுதான்!'' - நீலன்.

அவர்கள் நடந்தபடி பேசிக்கொண்டே சென்றனர்.



அவர்கள் மலைவனத்து ஒற்றையடிப்பாதையில் முட்புதர்ச் செடிகளில் பட்டுவிடாமல் குனிந்தும் வளைந்தும் நடந்து சென்றனர்.

விலங்குகளின் குரல்கள், பறவைகளின் ஓசைகள், குரங்குகளின் கூச்சல் கேட்டுக் கொண்டு இருந்தன. அவர்களை ஒரு பாறையில் இருக்கச் சொல்லிவிட்டு, நீலன் ஒரு இடத்தில் மரங்களில் படர்ந்திருந்த கொடிகளை வெட்டி இழுத்து வந்தான்.

''சாமி இந்தக் கொடி இலைகளை ஆளுக்குக் கொஞ்சம் பறிங்க'' என்று சொல்லி அவனும் இலைகளைப் பறித்தான்.

இலைகளை எல்லாம் வாங்கி ஓடையில் கழுவிவிட்டு வந்தான்.

''யாராவது ஒரு பாத்திரம் தாங்களேன்'' என்றான் நீலன்.

அமுதன் தன் டிபன்பாக்ஸில் இரண்டு தட்டுகளில் இருந்ததை ஒரே தட்டில் போட்டு விட்டு ஒரு தட்டை நீலனிடம் தந்தான்.

அதில் தண்ணீர் பிடித்துக்கொண்டு வந்த நீலன் அந்த இலைகளை லேசாக இடித்து எடுத்து, தண்ணீர் உள்ள தட்டில்

குறுக்கெழுத்துப் புதிர் விடை!



1 அ	க்	ப	ர்	■	ம்	ம	ர்	2 ம
மீ	■	■	3 ஏ	ணி	■	■	■	த்
4 பா	ர்	லி	■	■	ம்	ச	ஞ்	5 த
■	■	■	லை	6 கா	■	■	■	ள
ம்	ன	ன்	7 அ	■	8 சி	க	ர	ம்
ள	■	■	■	ளை	9 ஊ	■	■	■
10 பா	த	சா	ரி	■	■	ம்	ர	11 பா
ம்	■	■	■	லி	12 கூ	■	■	ண்
13 தா	மி	ர	ம்	■	ன்	ட	ல்	14 டா

பிழிந்தான். சிறிது நேரத்தில் அந்தத் தண்ணீர் கட்டியாக மாறிவிட்டது.

"சாமி இதுதான் மூலிகை அல்வா, இப்படியே ஆளுக்குக் கொஞ்சம் சாப்பிடலாம். சர்க்கரை போட்டால் இன்னும் தித்திப்பா இருக்கும்."

அவர்கள் ஆளுக்குக் கொஞ்சம் சாப்பிட்டனர்.

"அட அருமையா இருக்கே. இந்தக் கொடி பேரு என்னப்பா? இது எதுக்கு நல்லது சொல்லேன்?" - இளங்கோ.

"சாமி இதுக்குப் பேரு 'கட்டுக்கொடி'. இது தொய்யல் விழுந்த உடம்பு சதையைக் கெட்டியாக்கி உடம்பைச் சரியாக்கும். அலை பாய்கிற மனசைக் கட்டுப்படுத்தும், உடம்பு குளிர்ச்சியாகும். அதனால இதுக்குப் பேரு கட்டுக்கொடி."

"இதை எங்க வீட்ல வச்சா வருமா?"

"வருஞ்சாமி. திரும்பி வர்றப்ப சின்னக் கன்னா பிடுங்கித் தரேன். கொண்டு போயி வையிங்க. சரி வாங்க, போகலாம்."

அவர்கள் நடந்து மேலே ஏறிப் போனார்கள். மேகங்கள் தாழ வந்து அவர்களைத் தழுவி விட்டுப் பின் மறைந்து போனது. சிலு சிலுவென்று தூரல் விழுந்து பின் நின்றது. குரங்குகள் பெருஞ்சத்தத்துடன் கூட்டங் கூட்டமாக மரக்கிளைகளில் பாய்ந்து சென்றன.

"சரி, இனி பேசாமல் வரணும். யானை நடமாடுற இடம் இன்னும் கொஞ்சம் தூரத்துல. ஃபாரஸ்ட்காரங்க மாடம் கட்டியிருக்காங்க. கயிறு ஏணி வழியா மேலேறி இருந்தோமுன்னா மிருகங்களைப் பார்க்கலாம்."

நீலன் சொன்னதும் அவர்கள் பேசாமல் நடந்தனர்.

"சரி மரத்தடியில இருங்க; நான் ஓடையில போயி தண்ணி புடிச்சிட்டு வரேன்." ஒரு மாணவன் பிளாஸ்டிக் பையைத் தந்து "இதுல தண்ணீர் கொண்டு வா நீலா வேற தனியா பாத்திரமில்லே" என்றான். நீலன் தண்ணீர் கொண்டு வந்ததும் அவர்கள் கயிற்று ஏணி வழியாக மேலே ஏறினார்கள்.

மேலே சமமாக கிளைகள் பிரியும் இடத்தில் பலகைகளால் ஆன ஒரு அறைச் சுற்றிலும் ஜன்னல்கள். "அட அருமையான வீடு மாதிரியில்லே இருக்கு" என்றான் கண்ணன். அவர்கள் கொண்டு வந்ததைச் சாப்பிட்டார்கள்.

யானைகளின் பிளிறல் சத்தம் கேட்கத் துவங்கியது. அவர்கள் வேகமாகச் சாப்பிட்டு முடித்துவிட்டுப் பார்க்கத் துவங்கினார்கள்.

முதலில் ஒரு கொம்பன் யானை மெல்ல நடைபோட்டு வந்து கொண்டிருந்தது. பின்னால் நான்கு பெண் யானைகள், இடையே

ஒரு குட்டியானை. அவை மரமிருக்கும் பாதை வழியே வந்து கொண்டு இருந்தன.

"சாமி ஒரு வேடிக்கை காட்டட்டுமா?" நீலன் மெல்லப் பேசினான். அவர்கள் 'சரி சரி' என்றனர். அவன் ஒரு கையை வாயருகில் வைத்து ஒரு பயங்கர சத்தம் எழுப்பினான். அது புலியின் உறுமல் சத்தம். பெண் யானைகள் பெரிதாக பிளிறியவாறே வந்த பாதையில் ஓடத் துவங்கின. புதர்களைச் செடிகளை மிதித்துக்கொண்டு ஓடின. இடையே ஓடிய குட்டியானை பெரிய யானைகளின் கால்களில் பட்டு உருண்டது. உடனே தாய் யானை குட்டி யானையைத் தும்பிக்கையால் தூக்கிக்கொண்டு ஓடியது.

அது அவர்களுக்கு வேடிக்கை காட்சியாக இருந்தது. கொம்பன் யானை மட்டும் அசையாமல் நின்றது. காதுகளை முன்புறம் வளைத்து சத்தம் வந்த திசையை உணர முயற்சித்தது. 'உர்ர்' என்று காற்றை உறிஞ்சிய சத்தம் பலமாகவே கேட்டது.

"வாடையை நுகர்ந்து பார்க்குது" என்று மெல்லக் கூறினான் நீலன்.

கோபத்தால் தலையை இப்படியும் அப்படியும் அசைத்தது. தும்பிக்கையைச் சுழற்றியது. கால்களால் தரையை மிதித்தது.

நீலன் மீண்டும் ஒரு உறுமல் சத்தம் போட்டான். கொம்பன் யானை ஒரே ஓட்டமாக ஓடி மறைந்தது. அந்த இடம் ஒரே அமைதியாக இருந்தது. "இனிமேல் பயமில்லே சாமி" - நீலன்.

"அப்படியா!" என அவர்கள் வியந்தனர்.

"அதுக்காக நாங்க இப்படியெல்லாம் சத்தம் போட்டு ஓடவிட மாட்டோம். முடியாத சூழ்நிலை, தப்பிக்க வேண்டிய கட்டாயம் இருந்தால் மட்டும் இப்படி புலி சத்தம் போடுவோம். இன்னைக்கி உங்களுக்குக் காட்டணு முன்னுதான் இப்படி சத்தம் போட்டேன்."

"சரி நீலன், யானை மனுசங்களை எதுக்காகத் தாக்குது?"

"தாக்காது சாமி. நாம அதுக்குப் பயப்படற மாதிரி அதுவும் நமக்குப் பயப்படும்!"

"யானைகளில் மதம் பிடிச்சது, ஏற்கெனவே மனுசனைக் கொன்ன யானை, கூட்டத்திலேயிருந்து விரட்டப்பட்ட ஒற்றை ஆண் யானை, குட்டிபோட வரும் பெண் யானை இதுகள் மட்டும் ஆளைத் தாக்க வரும், தூரவும் வீசி எறியும். யானைக்கு வெள்ளை நிறம் புடிக்காது. சட்டை வேட்டிய கழட்டிப் போட்டமுன்னா அதைக் கிழிச்சி கந்தலாக்கும். அப்ப நாம ஓடிப் போயிடலாம். சரி சாமி, நேரமாச்சி இறங்கிப் போயிடலாம்" என்றான் நீலன். அவர்கள் ஏணி வழியாக இறங்கினார்கள்.

"இன்னிக்கு நல்ல காட்சி; நிறைய விஷயங்களையும் தெரிஞ்சிகிட்டோம். நீலனுக்கு எல்லோர் சார்பிலும் நன்றிகள்."

அமுதன் இருபது ரூபாய் எடுத்துத் தந்தான். நீலன் பெற்றுக்கொண்டு அடி வாரம் வரை உடன் வந்து அவர்களை அனுப்பி வைத்தான்.

தக்காளி

தக்காளிப் பழத்தின் பிறப்பிடம் தென் அமெரிக்காதான். அங்கு 'பெரு' நாட்டு மலைப்பகுதிகளில் இது காட்டுச்செடியாக வளர்ந்து கவனிப்பாரற்றுக் கிடந்தது. இதை அங்கு வாழ்ந்த பழங்குடி சிவப்பு இந்தியர் 'தொமட்டி' என்று அழைத்தனர். 'தொமட்டி' என்றால் அவர்கள் மொழியில் காட்டுச்செடி என்று அர்த்தம். இந்தத் 'தொமட்டி' என்ற சொல்தான் ஆங்கிலத்தில் 'டொமேடோ' என்று ஆயிற்று.


- எம். ஜரினா பானு



● ம. அமுதா, காளையார் கோவில்

? எனக்கு அடிக்கடி ஜல தோஷம் பிடித்துக்கொள்கிறது. இதை நிரந்தரமாகக் குணப் படுத்த என்ன சிகிச்சை உள்ளது டாக்டர்?

! நூற்றுக்கும் மேற்பட்ட வைரஸ் கிருமிகளால் ஜலதோஷம் ஏற்படுகிறது. ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அதிவேகமாகப் பரவக்கூடிய ஆற்றல் இக்கிருமிகளுக்கு உண்டு. ஆண்டு முழுவதும் இக்கிருமிகள் பரவுவது வழக்கம் என்றாலும், மழைக்காலங்களில் இவற்றின் தீவிரம் இன்னும் அதிகரிக்கும். ஜலதோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தும்மும்போதும் இருமும் போதும் இக்கிருமிகள் மற்றவர்களுக்குப் பரவி விடும். நோய் வந்த ஒரு வாரத்தில் தானாகவே குணமாகிவிடும். மேலும், முகத்தில் உள்ள காற்றறைகளில் நீர் சேர்ந்து 'சைனுசைட்டிஸ்' ஏற்பட்டிருந்தாலும் அடிக்கடி ஜலதோஷம் பிடிப்பதுபோல் அறிகுறிகள் தோன்றும். பஞ்சு, தூசு, ஒட்டடை போன்றவற்றுக்கு ஒவ்வாமை இருந்தாலும் தொடர்ந்து தும்மல், இருமல், மூக்கில் நீர் வடிதல் ஆகிய நோய்க்குறிகள் காணப்படும். ஆகவே, அடிக்கடி ஜலதோஷம் பிடித்தால் நேரடி மருத்துவ ஆலோசனையின் பேரில் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். நீராவி பிடித்தல், உப்பு கலந்த வெந்நீரில் வாய் கொப்பளித்தல் ஆகிய முதலுதவி முறைகளும் உதவும். ஜலதோஷத்தின் போது நிறைய சூடான பானங்களை அருந்துவதும், நல்ல சத்தான உணவுகளைச் சாப்பிடுவதும் நல்லது. சமையல் உப்பு கலந்த நீரை தினமும் மூன்றுவேளை ஒவ்வொரு மூக்குத்துவாரத்திலும் இரண்டு சொட்டுகள் விட்டால் மூக்கடைப்பு நீங்கி விடும். பாக்டீரியா தொற்று இருந்தால் நுண்ணியிர்க் கொல்லி மருந்து தேவைப் படும். ஜலதோஷத்தைத் தடுக்க எந்த மருந்தும் இல்லை. சத்தான உணவு சாப்பிட்டு, உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ள வேண்டும். ஜலதோஷம் பிடித்தவர்கள் தும்மும்போதும், இருமும் போதும் முகத்தைக் கைக்குட்டையால் மறைத்துக் கொள்ள வேண்டும்.






வெயில் உடலுக்கு நல்லதா?



● இரா. சுப்பிரமணியன், கோவில்பட்டி

? வைட்டமின் ஏ மாத்திரைகளைச் சாப்பிட்டால் கண்களுக்கு நல்லது என்கிறார்கள். இது உண்மையா டாக்டர்?

! வைட்டமின் ஏ சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டால் கண்களுக்கு நல்லது என்பது உண்மை. கண்களின் பார்வைத்திறன் சரியாக இருப்பதற்கு இச்சத்து தேவை. விழித்திரையில் உள்ள பார்வை அணுக்களின் இயல்பான செயல்பாட்டிற்கு இச்சத்து உதவுகிறது. தவிர, கண்ணின் வெண்படலம் மற்றும் கருவிழியில் உள்ள வெளிப்



புறத் திசுக்கள் நன்கு வளர்ச்சி பெறுவதற்கும் இது தேவைப்படுகிறது. காரட், பப்பாளி, மா, பலா, முள்ளங்கி, கீரைகள், மீன், பால், வெண்ணெய், கிரீம்கள் ஆகியவற்றில் வைட்டமின் ஏ சத்து அதிக அளவில் உள்ளது. இச்சத்து குறைந்தால் மாலைக் கண் நோய் ஏற்படும். பார்வை குறையும். அத்தோடு, விழிக் கோளத்தின் வெண்படலம் ஈரப்பசை இழந்து, சுருங்கி விடும். வெள்ளை விழியில் சில புள்ளிகள் உண்டாகும். கண் உலர்ந்து, கண்ணீர் சுரப்பது குறைந்து விடும். இம்மாதிரி நேரங்களில் வைட்டமின் ஏ மாத்திரைகளைச் சாப்பிட்டால் கண்களுக்கு நல்லது என்று மருத்துவர்கள் கூறுவார்கள். நாமாகவே சாப்பிடக் கூடாது. மாத்திரைகளைச் சாப்பிடுவதை விட சத்துள்ள காய்கறிகளைச் சாப்பிட்டுக் கண்களைக் காப்பதே சிறந்தது. சுப்பிரமணியன்.

● ப. ரவிச்சந்திரன், தர்மபுரி.


? காலை வெயில் உடலுக்குக் கெடுதல் என்றும் மாலை வெயில் உடலுக்கு நல்லது என்றும் சொல்கிறார்கள். இது உண்மையா, டாக்டர்?

! உண்மையில்லை. வெயில் மூலம் நம் உடல் வைட்டமின் டி சத்தைப் பெறுகிறது. காலை வெயில், மாலை வெயில் இரண்டிலுமே இது கிடைக்கிறது. நடுப்பகல் வெய்யில் தவிர்க்க வேண்டும்.

● ஸ்டீவ் எம். எலியட், கும்மிடிப்பூண்டி.

? டாக்டர், என் உடலில் பலம் இல்லை. நான் தினமும் இருவேளை பால் குடித்தும் பலன் இல்லை. ஒரு வழி கூறுங்கள்.

! கைக்குழந்தைக்குத்தான் பால் ஒரு முழுமையான உணவு. மற்றவர்களுக்குப் பால் மட்டும் போதாது. மாவுச்சத்தும் புரதச் சத்தும் நிறைய உள்ள தானிய உணவுகள், வைட்டமின் நிறைந்த காய்கறிகள், கீரைகள், பழங்கள், கொழுப்புச் சத்து நிறைந்த முட்டை, இறைச்சி ஆகிய உணவுகளையும் அடிக்கடி சாப்பிட வேண்டும். அடுத்து, தினமும் அரை மணி நேரம் விளையாட வேண்டும் அல்லது உடற் பயிற்சி செய்ய வேண்டும். இயலா விட்டால் குறைந்தது 3 கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டும்.









● தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்.

? கடைகளில் விற்கும் தலைவலி மாத்திரைகளைச் சாப்பிட்டால் வயிற்றுவலி வருவது ஏன்?

! தலைவலி மாத்திரைகளில் அமிலப் பண்புள்ள அசிட்டைல் சாலிசிலிக் அமிலம் (ஆஸ்பிரின்) அனால்ஜின் ஆகிய மருந்துகள் உள்ளன. இவை வயிற்றில் உள்ள சீதப்படலத்தை அரித்துப் புண்ணாக்கும் தன்மை உடையவை. ஆகையால் அடிக்கடி இந்த மாத்திரைகளைச் சாப்பிட்டால் இரைப்பையில் புண் உண்டாகிவிடும். வயிற்றுவலி வரும். மருத்துவரின் நேரடி ஆலோசனை இல்லாமல் சுயமாக எந்த ஒரு மருந்தையும் எவரும் சாப்பிடக் கூடாது.

கேட்கட்டுமா டாக்டர்? **டாக்டர் கு. கணேசன்**



விடுகதைக்கு விடை என்ன?

தொட்டால் உறங்கும் விட்டால் சிரிக்கும் அது என்ன?

I. 1. நாலு உலக்கை குத்தி வரும்; இரண்டு முறம் புடைத்து வரும்; ஒரு துடைப்பம் பெருக்கிக் கொண்டே வரும். - அது என்ன?

2. பச்சை கோட்டைக்குள், வெள்ளை மாளிகைக்குள் பதுங்கி இருப்பார்கள் கறுப்பு வீரர்கள் - அது என்ன?

3. நான் இறங்காத கிணற்றில் என் தம்பி இறங்குவான் - அது என்ன?

4. கல்லை சுமந்தவன், கறிக்கு ருசி - அது என்ன?

5. இரண்டு வீட்டுக்கு ஒரே தூண் - அது என்ன?

6. வளைப்பவர் வளைத்தால் வாயு வேகம் - அது என்ன?

- உமா மகேஸ்வரி, மன்னார்குடி.

II. 1. மட்டையுண்டு கட்டையில்லை, பூவுண்டு மணமில்லை - அது என்ன?

2. போகுமிடமெல்லாம் கோடு கிழித்திடுவான் - அவன் யார்?

3. பட்டணத்து ஆல மரம் வெட்ட வெட்ட துளிர்க்குது - அது என்ன?

4. அந்தரத்திலே பறக்கும் பறவையும் அல்ல; அழகான வாலுண்டு குரங்கும் அல்ல - அது என்ன?

- இ.சே. அறிவழகன், உத்திரமேரூர்.

III. 1. காலுமில்லை, வாலுமில்லை காத வழி ஓடுவான். பேச்சும் உயிரும் இல்லை பெரிய சத்தம் போடுவான்- அவன் யார்?

2. ஐந்து ஊருக்கு ஒரு மந்தை, ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் - அது என்ன?

3. சித்திரப் பின்னல் கோட்டைக்குள்ளே போகவழியுண்டு, திரும்பி வர வழியில்லை - அது என்ன?

4. நீரில் விளையும் பூ, உண்ம் வெள்ளைப் பூ - அது என்ன பூ?

- குருராஜ், கரூர்.

IV. 1. அணில் ஏறாத கொம்பு - அது என்ன கொம்பு?

2. அன்றாடம் மலரும்பூ; அனைவரையும் கவரும்பூ; விரல்களில் பிறக்கும்பூ; விதவிதமான பூ! - அது என்ன?

3. இரவல் கிடைக்காதது; இரவில் கிடைப்பது - அது எது?

4. உச்சியிலே பூக்கும் பூ - என்ன பூ?

5. பல்லில்லா நாக்கனார், ஆனால் படபடவென்று பேசுவார் யார்?

- ப. கந்தசாமி, திருச்செங்கோடு

V. 1. கருகமணி, திருகுமணி கல்லால் அடிச்சமணி ஒண்ணு எடுத்து கோர்த்த வங்களுக்கு ஊரும் தாரேன், உலகமும் தாரேன், உலகஞ்செட்டி மகளத் தாரேன் தேரும் தாரேன், தெருவும் தாரேன் திருநார் நாக்கர் மகளும் தாரேன் - அது என்ன?

2. ஆள் இறங்காத கிணத்துக்குள்ள மயில் இறங்கி ஆடுது - அது என்ன?

3. அண்ணன் வெட்டிய கிணற்றுக்குள் தம்பி இறங்க முடியும். தம்பி வெட்டிய கிணற்றுக்குள் அண்ணன் இறங்க முடியாது - அது என்ன?

4. தொட்டால் உறங்கும் விட்டால் சிரிக்கும் - அது என்ன?

- இ. மாரியம்மாள், ஆண்டிபட்டி

விடைகள் :

I. 1.யானை, 2. சித்தாப்பழம் 3. அளவை படிகள் 4. புடலங்காய் 5. மூக்கு 6. வில்-அம்பு.
II. 1. வாழை 2. நத்தை 3. தலைமுடி 4. பட்டம்
III. 1. ரயில் 2. உள்ளங்கை 3. எலிப் பொறி 4. உப்பு
IV. 1. மாட்டுக்கொம்பு 2. கோலம் 3. தூக்கம் 4. தாழம்பூ 5. மணி.
V. 1. குந்துமணி 2. அகப்பை 3. அளவை படிகள் 4. தொட்டாசிணுங்கி



காலம் தாழ்த்தாதே!

இரண்டு நாட்களுக்கு முன் ஆசிரியர் நடத்திய பாடத்தை இன்றுதான் படிக்க ஆரம்பித்தான் முருகேசன். அவனது நண்பர்கள் சுரேஷும் மாதவனும் வந்தனர்.

"டேய் முருகேசன், என்னடா, நாங்க முந்தா நாள் படிச்ச பாடத்தைப் போயி இன்னைக்குப் படிக்கிற?" என்று கேலியாய் கேட்டான் சுரேஷ்.

"டேய் சுரேஷ், அவன்தான் நாலு நாளைக்கு முந்தைய பாடத்தை, முந்தா நாள் படிச்சானே, அப்ப முந்தாநாள் பாடத்தை அவனால் இன்னைக்குத்தானே படிக்க முடியும்" என்று மாதவனும் தன் பங்குக்குக் கேலி பேசினான்.

ஆனால்.... அதற்கெல்லாம் முருகேசன் கொஞ்சமும் வருத்தப்படவே இல்லை.

"டேய்... எப்பப் படிச்சா என்னடா? பாடம்தானே... இது என்ன பழமா அழுகிப் போறதுக்கு?" என்று சமாளித்தான்.

முருகேசனுக்கு இவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். அதனால் அவர்கள் என்ன கேலி செய்தாலும், அதை அவன் தவறாக எடுத்துக் கொள்ளவே மாட்டான்.

பள்ளிக்கு வருவதிலும் தாமதம்தான். அதற்குத் தண்டனையாக ஆசிரியர் அடிப்பதும், குறிப்பிட்ட நேரம் வரை வாசலிலேயே நிற்க வைப்பதும் சகஜமாகி விட்டன. ஆனால் ஒருநாளும் அவன் மனத்தில் தவறு என்று உணர்த்தியதே இல்லை.

வீட்டிலும் இதேபோல்தான். எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும் தாமதமாகத்தான் செய்வான். இதனால் வீட்டில்

அருப்புக்கோட்டை **செல்வம்**

பல பிரச்னைகள் ஏற்பட்டதுண்டு. இப்போதெல்லாம் அம்மாவோ, அப்பாவோ, தாத்தாவோ யாருமே அவனிடம் எதுவும் வேலை சொல்வதில்லை.

அது மட்டுமின்றி அவன் வேலையைக்கூட ஞாபகப்படுத்தியாக வேண்டும். அப்படி இருந்தும் அந்த வேலைகளை உடன் செய்யவே மாட்டான். இவனை என்ன சொல்லித் திருத்துவது என்று அவனது தாத்தா சுந்தரலிங்கம் அடிக்கடி கவலை கொள்வார்.

அன்று பள்ளிக்கு வந்தபோது மாதவன் ஒரு நாளிதழோடு வந்தான்.

''டேய் மாதவன், அது என்னடா? இங்கே கொடு நான் கொஞ்ச நேரம் படிச்சிட்டுத் தர்றேன்'' என்றான் முருகேசன்.

அவனும் அந்த நாளிதழைக் கொடுக்க, படிக்க ஆரம்பித்தான். சிறுவர் பகுதியில் போட்டி முதல் பரிசாக ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் பள்ளி மாணவர்கள் மட்டுமே பங்கேற்கக் கூடிய போட்டி என்பதால், அவனுக்கும் அதில் கலந்து கொள்ள ஆசை.


''டேய் முருகேசன், என்னடா அந்தப் போட்டியையே பார்த்துக்கிட்டு இருக்கே. நீ கலந்துக்கப் போறியா...?'' என்று கேட்டான் மாதவன்.

''டேய்... போட்டிக்கு முடிவு தேதி கொடுத்திருக்காங்க. அதுக்குள்ள அனுப்பணும். உன்னால அதெல்லாம் முடியாது'' என்றான் சுரேஷ்.

அப்படி அவன் சொன்னதற்காகவே அந்தப் பக்கத்தைக் கத்தரித்து, தன் முகவரி, போட்டியில் சேர்க்கப்பட்டிருந்த கேள்விக்கான பதில் என்று எழுதி, தனது தமிழ் நோட்டில் பத்திரப்படுத்தினான்.

''என்னடா உடனே அனுப்பலையா?'' என்றான் சுரேஷ்.

''ம்... கவர் வேணும். ஸ்டாம்ப் வேணும். போஸ்டாபிஸ் போய் வாங்கி இன்னைக்கே அனுப்புவேன்'' என்று உறுதியாய்ச் சொன்



னான்.

இது நடந்து இரண்டு மாதங்கள் ஆகி இருக்கும். அவனது பெயருக்கு ஒரு பார்சல் வந்திருந்தது. அதில் என்ன இருக்கும் என்று ஆவலோடு பிரித்தான்.

போட்டியில் அவனுக்கு முதல் பரிசு கிடைத்திருந்தது. அப்போதுதான் அவனுக்கு அந்தச் சிந்தனையே வந்தது. வேகமாக ஓடிச் சென்று தனது தமிழ்நோட்டை எடுத்தான். அதில் அவன் வைத்திருந்த பூர்த்தி செய்த அந்தக் காகிதம் அப்படியே இருந்தது.

எப்படி இது சாத்தியமாகும்? நான்தான் அனுப்பவே இல்லையே? எப்படி எனக்கு முதல் பரிசு கிடைத்தது? என்று அவன் யோசித்துக்கொண்டிருக்கும்போதே, சுரேஷும், மாதவனும் வந்து விட்டனர். தாத்தா சுந்தரலிங்கம்கூட அங்கேதான் இருந்தார்.

''என்ன முருகேசா பார்சல் வந்திருக்கு. என்னனு சொல்லக் கூடாதா?'' - என்று கேட்டார் தாத்தா.

''அது... வந்து... தாத்தா...'' - பதில் சொல்ல முடியாமல் தடுமாறினான்.

''டேய் முருகேசன், என்னடா இது போட்டியில உனக்கு முதல் பரிசு கெடைச்சிருக்கு; சந்தோஷமான விஷயம்தானே. ஏண்டா ஒரு மாதிரியா இருக்கே?'' என்று கேட்டான் மாதவன்.

''சரி... பதில் சொல்ல விருப்பம் இல்லேன்னா, சொல்ல வேண்டாம். நான் போறேன். நீயும் வாடா'' என்று சுரேஷை அழைத்தான் மாதவன்.

''டேய்... நில்லுங்கடா. போட்டிக்கு நான் அனுப்பவே இல்ல. இங்கே பாருங்க. நான் நோட்டுல வச்ச அந்தக் காகிதம் இன்னும் அப்படியே இருக்கு. இது எப்படி வந்ததுன்னு எனக்குத் தெரியல'' என்று பதில் சொன்னான் முருகேசன்.

''ரொம்பக் குழம்பாதேடா. அதை அனுப்பினது நான்தான். உங்க தாத்தாதான் வேறொரு படிவத்தை என்கிட்டக் கொடுத்து, உன் பேருல அனுப்பச் சொன்னாரு'' என்றான் மாதவன்.


''தாத்தா... நீங்களா... ஏன் தாத்தா அப்படி செஞ்சீங்க?'' என்று தாத்தாவைப் பார்த்துக் கேட்டான் முருகேசன்.

''எல்லாம் உனக்கு ஒரு உண்மையை உணர வைக்கத்தான்'' என்றார்.

கலங்கரை விளக்கம்

எகிப்து நாட்டின் புகழ் பெற்ற துறைமுகம் அலெக்ஸாண்டிரியா. அந்தத் துறைமுகத்தின் பரோஸ் என்னும் கலங்கரை விளக்கமே உலகில் முதல்முதலாகக் கட்டப்பட்ட கலங்கரை விளக்கம். பரோஸ் கலங்கரை விளக்கத்தின் உயரம் 400 அடி. இது கி.மு. 280ஆம் ஆண்டில் கட்டப்பட்ட அழகுமிக்க கலங்கரை விளக்கமாகும்.

-க. பூங்கொடி
சித்தோடு.



''உண்மையா... என்ன சொல்றீங்க தாத்தா?''

''ஆமாம் முருகேசன். காலத்தோடு செய்யக்கூடிய எந்தச் செயலும் வெற்றி பெறும் இல்லையா...? உன்னால இப்ப அதை உணர முடியுதா?'' என்று கேட்டார் தாத்தா.

''ஆமாண்டா முருகேசன். கொஞ்சம் யோசிச்சுப் பாரு. இந்தப் படிவத்தைச் சரியான நேரத்துல அனுப்பினதுனால பரிசு கிடைச்சது. இல்லாட்டி கிடைக்குமா?'' என்று கேட்டான் சுரேஷ்.

அப்போதுதான் ஏதோ புரிந்தவன் போல் நிமிர்ந்து பார்த்தான் முருகேசன்.


''நீ தினமும் சட்டை கழற்றிப் போடுற இல்லையா, அம்மா தினமும் சோப்புப் போட்டு அலசி உலர்த்திடுவாங்க. வாரத்துக்கு ஒரு தடவை சோப்புப் போடலாம் என்று இருந்தால் என்ன ஆகும்? அழுக்குச் சுமை அதிகமாயிடும். பள்ளிக்கூடத்துல உன்னை விட மற்ற மாணவர்கள் அதிக மதிப்பெண் எடுக்குறாங்க. ஏன்? அவங்க தினமும் தங்களோட பாடங்களைப் படிச்சு முடிச்சிடுறாங்க. உன்னை மாதிரி பரீட்சை நேரத்துல மொத்தமா படிக்கறது இல்லை. நீயும் அன்றாடம் வேலைகளைச் செய்து பார். உனக்கு முன்னேற்றம் கிடைக்கும்'' என்றார் தாத்தா.

தாத்தா சொன்னதிலும் உண்மை இருப்பதை உணர்ந்தான். அன்றுமுதல் இனி எந்த வேலையிலும் காலம் தாழ்த்தப் போவதில்லை என்று உறுதி எடுத்தான்.

"குலை குலையா முந்திரிக்கா, நரியே நரியே சுத்தி வா" என்று சின்ன வயதில் பாடி விளையாடியிருப்பீர்களே, நினைவிருக்கிறதா? முந்திரிக்கா, கொடி முந்திரி, முந்திரி பழம் என்பதெல்லாம் திராட்சைக்குக் கிராம மக்கள் வைத்த செல்லப் பெயர்கள். திராட்சை, கொடியில், பந்தலில்தான் காய்க்கும் என்று தெரியும். திராட்சை மட்டுமல்ல, அதனைப் பற்றிய வரலாறும், கதையும்கூட சுவையானதே! இத் திராட்சை இரட்டை விதையிலையுள்ள வெட்டேசியே என்ற தாவர குடும்பத்தைச் சேர்ந்தது. இவை வடமித வெப்ப மண்டல பகுதிகளில் அதிகமாக விளைகின்றன. திராட்சைக்கும் மனித குலத்தின் வயது தான் ஆகிறது. ஆம், மனித மூதாதையர்கள் தோன்றிய மையோசீன் காலத்திலிருந்தே திராட்சையும் உண்டு. வட அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து மற்றும் ஐஸ்லாந்திலிருந்து கிடைத்த, திராட்சையின் இலை, கொடி மற்றும் விதையின் கற்படிமங்கள் இதை நிரூபிக்கின்றன.



திராட்சை பயிரிடுதல் ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்காவில் பண்டைக்காலம் முதலே இருந்து வந்திருக்கிறது. ஸ்விட்சர்லாந்தின் ஏரிக்கரையில் காணப்படும் பண்டைக் குடிசை சிதைவுகளிலும் எகிப்தில் இறந்த அரசர்களின் உடலைப் பாதுகாக்கும் பிரமிடுகள் என்ற கல்லறையிலும் திராட்சை விதைகள் காணப்படுகின்றன. கிரீஸில் ஹோமர் காலத்திலேயே (கி.மு.1000) திராட்சை மது சாதாரணப் பொருளாக விற்கப்பட்டிருக்கிறது. பிளினி என்ற ரோமானிய ஆசிரியர் அப்போது 91 வித திராட்சை வகைகளும், 50 வகை திராட்சை மதுவும் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். யவனர்கள்தான் தமிழ்





கொடி முந்திரி




நாட்டுக்குத் திராட்சை மதுவினைக் கொண்டு வந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

திராட்சை முதன்முதலில் காஸ்பியன் கடற்கரை ஓரங்களில்தான் பயிரிடப்பட்டுள்ளது. பின்னர் அங்கிருந்து ஆசியா மைனர் மற்றும் கிரீஸுக்கும், அதன்பின் சிசிலித் தீவுக்கும் அப்புறம் ஐரோப்பாவிற்கும் பரவியது. ரோமானியர்கள் இதனை இங்கிலாந்துக்குக் கொண்டு சென்றனர். பின் அங்கிருந்து இந்தியாவுக்கு வந்தது. உலகில் 3,000 வகை திராட்சைகள் உள்ளன. இதில் 1000 வகைகள் அமெரிக்காவில் மட்டுமே தோன்றியவை.

திராட்சைக் கொடியில் இலைகள், பற்றுக் கம்பிகள் மற்றும் பக்கக் கிளைகள் அனைத்தும் உண்டு. திராட்சை மலர், கொத்து கொத்தாகவே பூக்கும். திராட்சைப் பழம் பச்சை, கருஞ்சிவப்பு, நீலம் மற்றும் கருநீல நிறங்களில் உள் ளன. சிலவற்றில் 2லிருந்து 4 விதைகளும், சிலவற்றில் விதையில்லாமலும் இருக்கும். உயிரியல் தொழில் நுட்பம் மூலம் எளிதில் கெட்டுப் போகாத கடின சதைப்பற்றும், மென்மையான தோலும், விதைகளற்று இனிப்பாகவும் உள்ள உணவுத் திராட்சைகளும், குறைந்த

சர்க்கரை உள்ள மதுவகை திராட்சைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உலகில் பயிரிடும் திராட்சை வகைகள் பெரும்பாலும் 'வினிபெரா' என்ற தாவர வகையைச் சேர்ந்ததே!

திராட்சைக் கனியிலிருந்து மது, உணவு, உலர்வகை மற்றும் பழச்சாறு தயாரிக்கப் பட்டாலும், இவை வேறு வேறு வகை களிலிருந்தே உருவாக்கப்படுகின்றன. மது தயாரிக்கப் பயன்படும் திராட்சையில் சர்க்கரை குறைவாகவும், அமிலம் அதிகமாகவும் உணவுக்கான திராட்சையில் அமிலம் குறைவாகவும், சர்க்கரை அதிகமாகவும் இருக்கும். நமது இனிப்பு வகை உணவுகளில் பயன்படும் உலர் திராட்சைதான் 'கிஸ்மிஸ்' எனப்படுகிறது. 30 வகை திராட்சை, உணவுக்காகவும் 3 வகைகள் மட்டுமே உலர் வகைக்காகவும், ஒரு வகை திராட்சையிலிருந்து சாறும், பதப்படுத்துதலும் செய்யப்படு கிறது. பதப்படுத்தப்பட்ட திராட்சையிலிருந்து சாலட், ஜாம் மற்றும் ஜெல்லி செய் யப்படுகிறது.




திராட்சைக் கனியில் 77.4% நீர், 19.2% சர்க்கரை, 1.6% கொழுப்பு, 1.8% புரதம், 0.5% தாது உப்புகள் மற்றும் வைட்டமின்கள் உள்ளன. இந்தியாவில் 125 வகை திராட்சை விளைகிறது. பம் பாய் அருகே புனேயிலும், கர்நாடகாவிலும் ஆந்திரா வில் ஹைதராபாத் மற்றும் செகந்திராபாத் திலும், தமிழ்நாட்டில் மதுரையிலும், பஞ்சாப் மற்றும் ஹரியானவிலும் விளைகிறது. இந்தியாவில் திராட்சை குறைவான இடங் களில் பயிரிடப்பட்டாலும், அதிக விலைக்கு விற்கப்படுகிறது. நிறைய திராட்சை ஆப்கானிஸ்தானத்திலிருந்தே வரு கிறது. இந்தியாவில் பயிரிடப்படும் திராட் சையின் தரம், ஆப்கன் திராட்சைக்கு ஈடான தல்ல; சற்று தரம் குறைந்ததே! தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் வீடு தோறும் திராட் சையை வளர்க்கின்றனர். ஒரு கொடி யிலிருந்து சுமார் ரூ.100 வரை வருமானம் கிடைக்கிறது.

நல்ல வெயில்படக்கூடிய மேட்டு பூமி யில் மட்டுமே இதனைப் பயிரிட முடியும், மழைக்காலத்தில் நில நீர் மட்டம், தரைக் குக் கீழ் 6 அடிக்கும் தாழ்வாக இருக்க வேண்டும். திராட்சை நன்கு செழித்து வளர சரளை கலந்த செம்மண் நிலமே ஏற்றது; களர் நிலத்தில் திராட்சை பட்டுப் போய்விடும். திராட்சைப் பதியன்களை நட ஆடி மாத மாலை நேரமே உகந்தது. கொடிப் பதியன், குச்சிப் பதியன் என இரு வகை உண்டு. கொடிப்பதியன் முதல் ஆண்டில் 10 குலைகள் விடும்; அடுத்த பருவத்தில் 100 குலைகள் விடும். திராட்சைக் கொடி, 5,6 ஆண்டாகி முதிர்ந்த பின் நிறைய காய்க்கும்; 20 ஆண்டுகள் வரை காய்த்து உயிர் வாழும். குலைகள் சிறுத்தாலும் காய்ப்புக் குறை யாது.

நீங்கள் திராட்சையை எடுத்துப் பார்த்தாலே தெரி யும். அதில் படிந்துள்ள சாம் பல் நிறப் போர்வை பூச்சிக் கொல்லிகளின் அரசாட்சி தான். இதனை நீங்கள் கையால் துடைத்தால் போகாது. ஒவ்வொரு பழமாய் எடுத்து நீரில் தேய்த்துக் கழுவினால் மட்டுமே போகும். நீங்கள் திராட்சை சாப்பிடும்போது அதிலுள்ள சத்தைவிட, அதிகமான நச்சுப் பொருட் களையே உடலுக்குள் செலுத்துகிறீர்கள். அதில் படிந்துள்ள கன உலோகங் கள், உங்கள் குடலில் தொடர்ந்து படிந்து கொண்டே போய், நாளடைவில் உடல் ரீதியாகச் சில பிரச்னைகளை உண்டு பண்ணலாம். மேலும் விதையில்லா திராட் சையில் அதனை சதைப்பற்றுடன் உள்ள தாகக் காண்பிக்க, அதனுள் ஊசி மூலம் நீர் செலுத்துகிறார்கள். பழம் பெரிதாய் தெரிவதால், எளிதில் மக்கள் மனதைக் கவர்ந்து வாங்க வைத்து விடுகிறது. நாம் திராட்சையைச் சாப்பிடும்போது, கொஞ்சம் பூச்சி மருந்தையும் தவிர்க்க முடியாமல் உட் கொள்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

- மோகனா



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.


கிருஷ்ணரின் விருந்தாளி!

கதை: மோஹன்

அமைப்பு: உன்னி


படம்: அஜயன்















இப்படி உடைப்பதால் கிருஷ்ணனுக்குக் கோபம் வரும்.
துர்வாசர் சிலநாள் குறைவாகச் சாப்பிடுவார். சிலநாள் மிக அதிகமாகச் சாப்பிடுவார்!
கிருஷ்ணா! இன்று எனக்குப் பாயசம் சாப்பிட வேண்டும்.
உடனே ஏற்பாடு செய்கிறேன்.
ருக்மணி சிறிது நேரத்தில் பாயசத்துடன் வந்தார்.
முனிவரே பாயசம் தயார்.
இப்படி கொடு!
நான் சுவைத்துப் பார்க்கிறேன்.
பிறகு –
கிருஷ்ணா மீதிப் பாயசத்தை உன் உடலில் பூசிக்கொள்.
உங்கள் விருப்பப்படியே செய்கிறேன்.



கிருஷ்ணர் உடல் முழுவதும் பாயசத்தைப் பூசிக் கொண்டார்.
கிருஷ்ணா! ஏன் உன் பாதத்தில் மட்டும் பாயசத்தைப் பூசவில்லை?
நடக்கும்போது தரையில் ஒட்டுமே!
துர்வாசர் அடுத்து ருக்மணியிடமும் பாயசத்தைப் பூசிக் கொள்ளச் சொன்னார்.
ருக்மணி எடுத்துக்கொள்.
மறுநாள் -
கிருஷ்ணா! நான் ரதத்தில் பயணம் செய்ய வேண்டும். அதை ருக்மணிதான் இழுக்க வேண்டும்.
உங்கள் விருப்பம் நிறைவேறும்.
ம்... சீக்கிரம் இழு...
எந்தச் சூழ்நிலையிலும் நான் கோபம் கொள்ளக் கூடாது.


ம்... சீக்கிரம் போ.
ருக்மணி ரதத்தை நீண்ட தூரம் இழுத்துச் சென்றார்.
நிறுத்து!
ஏன் நிறுத்தச் சொன்னீர்கள்?
கிருஷ்ணா, ருக்மணி... நான் உங்கள் விருந்தினராக முழு திருப்தி அடைந்து விட்டேன்.
எங்களை ஆசீர்வதி யுங்கள் முனிவரே!
ருக்மணி! உன் பொறுமையான குணத்திற்குப் பரிசாக, நீ என்றுமே இளமையாகவே இருப்பாய்.
கிருஷ்ணா! பாயசம் பட்ட உன் உடலை எந்த ஆயுதமும் இனி தாக்காது.*
துர்வாசர் மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் துவாரகை யிலிருந்து கிளம்பினார்.
* பாயசம் பூசப்படாத பாதத்தில் அம்பு தாக்கியதன் மூலம் கிருஷ்ணரின் இறுதி சம்பவித்தது என்று பாரதம் கூறுகிறது.

நல்லதைக் கேளா துள்ளு மீன்!



கொக்கு ஒன்று பறந்துமே
குளத்தை நாடி வந்ததே!
திட்டு ஒன்றைப் பார்த்ததும்
திட்டம் தீட்டிக் கொண்டதே!

ஒடுக்கிக் கொண்ட உடலுடன்
ஒற்றைக் காலில் நின்றதே!
இடுக்கிக் கொண்ட கண்களில்
எவரும் அறியாப் பார்வையே!

கெண்டை ஒன்று நீரினைக்
கிழித்துக் கொண்டு வந்ததே!
குந்தி இருந்த கொக்கினைக்
கண்டு உள்ளே விரைந்ததே!

"நம்மைத் தின்ன கொக்குமே
நேரம் பார்த்து நடிக்குதே!
நம்ப வேண்டாம் எவருமே
நன்மை உள்ளே இருப்பதே!"

என்று கெண்டை சொன்னதும்
இளமை யான துள்ளுமீன்,
"என்னே!... இந்தப் பொய்யினை
ஏற்க மாட்டேன், நோயினால்

நொந்துப் போன கொக்குமே
நொண்டி யாகி விட்டதே!
கண்ணைத் திறந்து பார்ப்பதும்
கடினம்" சொல்லி நகைத்ததே!



பி.புலேந்திரன்

பின்னர் அந்தத் துள்ளுமீன்
பெரிதாய்த் துள்ளிக் கொண்டுமே
கண்ணை மூடி இருந்திட்ட
கொக்கின் அருகில் சென்றதே!

'எட்டும் அளவில் இளையமீன்
ஏற்ற தருணம்' என்றுமே
கொத்திக் கொண்டு அலகினால்
கொக்கு பறந்து சென்றதே!

"நல்லதைச் சொன்னது பெரியமீன்
நானே கெட்டேன் அறிவிலாத்
துள்ளலி னாலே" என்றுமே
துள்ளிய மீனும் அழுததே!



வெண்டைச் செடியும்

அந்தத் தோட்டத்தில் வெண்டை விதைகள் ஊன்றப்பட்டு, முளைக்கத் தொடங்கியிருந்தன. பாத்தியின் கரைகளில் ஏற்கெனவே நடப்பட்டிருந்த வேப்பங்கன்றுகள் மூன்றடி உயரத்தில் செழித்து வளர்ந்து நின்றன. முளை விட்டு வெளியே வந்த வெண்டைச் செடியொன்று வேப்பங்கன்றைப் பார்த்துக் கேட்டது.

''நாங்கள் பெருவாரியாக முளைக்கும் இந்தத் தோட்டத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாக உயர்ந்து நிற்கும் நீங்கள் யார்?''

''உங்களுக்கு முன்னமே இங்கே நடப்பட்ட வேப்பங்கன்றுகள்.''

''ஓஹோ! காலையில் தோட்டக்காரர், புதிதாகப் போடப்பட்ட வெண்டைத் தோட்டம் என்பதாகக் கூட வந்தவரிடம் கூறி விட்டுப் போனார். அப்படியானால் எங்களுக்காகவே அமைந்த தோட்டம்தானே இது?'' - வெண்டையின் வினாவில் இறுமாப்புத் தொனித்தது.

''இதிலென்ன சந்தேகம்?'' - சாந்தமாக எதிர்வினை தொடுத்தது வேம்பு.


''எங்களுக்கென்று பாய்ச்சப்படும் தண்ணீரை நீங்களும் உண்டு வளர்க்கிறீர்களாக்கும்'' என்று சொல்லிவிட்டு ஏளனமாகச் சிரித்துக்கொண்டது வெண்டை.


இருபது நாட்கள் கழிந்தன. இலையும் தழையுமாக 'விறுவிறு'வென வளர்ந்த வெண்டைச் செடிகள், வேப்பங் கன்றுகளின் உயரத்தையும் தாண்டி மேலோங்கி நின்றன. இன்று மறுபடியும் பேசத் தொடங்கியது வெண்டை.

''ஏ வேப்பங்கன்றே! என்ன வயதிருக்கும் உனக்கு?''

''ஒரு வயதாகிறது.''

கடகடவென்று வில்லன் பாணியில் சிரித்து முடித்த வெண்டை, ''இருபதே நாளில் என் வளர்ச்சியைப் பார்த்தாயா?





வேப்பங் கன்றும்

குரு. சீனிவாசன்

உனக்கும் மேலே வளர்ந்து விட்டேன். விரல்களின் அளவே இலைகளைக் கொண்ட உனக்கு, கையகல இலைகளைக் கொண்டிருக்கும் எங்களைப் பார்த்துப் பொறாமையாக இல்லையா?" என்று ஆணவத்துடன் கேட்டது.

"இதில் பொறாமைப்பட என்ன இருக்கிறது?" என்று பொறுமையாகச் சொல்லிற்று வேம்பு.

"இப்போதே உன்னையும் மீறி உயர்ந்து நிற்கிறேன். உன்னைப் போல எனக்கு ஓராண்டு ஆகும்போது, வளர்ந்து வளர்ந்து வானத்தையே தொட்டு விடுவேன் பார்!" என்று மார் தட்டியது.

"தம்பி, கொஞ்சம் பொறுமையாகக் கேள். நான் இங்கே நடப்பட்ட இந்த ஓராண்டில் உன் இனத்தவர்களில் மூன்று தலைமுறைகளைப் பார்த்துவிட்டேன். உங்களில் யாரும் அப்படி வளரவில்லையே?" என்று வேம்பு கூறியதும் வெண்டை வாயடைத்துப் போய்விட்டது.

அடுத்த சில நாட்களில் பூத்துக் காய்க்கத் தொடங்கியதும், வெண்டையை மீண்டும் அகம்பாவம் தொற்றிக்கொண்டது. அதனால் வேம்பை வம்புக்கிழுத்தது.

"பரிதாபத்திற்குரிய வேம்பே! பிறந்த சில காலத்துக்குள் பூத்துக் காய்த்து விட்டேன். நீ இன்னும் பூக்கவே இல்லை. பிறகு எப்போது காய்க்கப் போகிறாய்?"

"இன்னும் ஏழெட்டு வருஷமாகலாம்!"


"ப்பூ! இவ்வளவுதானா உன் மகிமை?" என்று இளக்காரமாகப் பரிகசித்துச் சிரித்துக்கொண்டது வெண்டை.

ஒரு மாதத்துக்குள் வெண்டைக் காய்கள் பறிக்கப்பட்டன. அதன் இலைகள் பழுத்து உதிரத் தொடங்கின. செடியின் உச்சியில் தொடங்கிச் சிறிது சிறிதாகக் காய்ந்து, பட்டுக்கொண்டிருந்தது. வெண்டையின் மனத்தில் மெல்ல பயம் படர ஆரம்பித்தது. அதன் ஆணவம் போன இடம் தெரியவில்லை. தயக்கத்துடன் அருகில் நின்ற வேப்பங்கன்றை ஏறிட்டுப் பார்த்தது. பழைய பசுமை மங்காமல் மிடுக்குடன் சிரித்துக் கொண்டிருக்கும் அதைப் பார்க்கத் தைரியமில்லாமல் நாணத்தால் தலைகுனிந்தது வெண்டை.


கோகுலம்
போஸ்டர்
INDIA
WILLS
Coca-Cola


300 விக்கெட்
சாதனையாளர்

மேடையில் மலர்ந்த சந்தோஷம்!



* டால்ஸ் டாய்

மூன்றாம் வகுப்பு...

அண்ணல் காந்தியடிகள் தமது வாழ்நாளில் ஒருமுறை கூட விமானத்தில் பயணம் செய்ததே கிடையாது. வெளிநாடுகளுக்குச் செல்வதானால் கப்பலில் மட்டுமே செல்வார். உள்ளூர்ப் பயணம் முழுவதும் புகை வண்டியில்தான். அதுவும் மூன்றாம் வகுப்பு பெட்டியிலேயே பயணம் செய்வார்! ஒருமுறை, ஒருவர் அண்ணலிடம், "ஏன் எப்போதும் மூன்றாம் வகுப்புப் பெட்டியிலே பயணிக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு காந்தி "என்ன செய்வது, ரயில்களில் நான்காம் வகுப்பு பெட்டிகளே இல்லையே" என்றார்.

— ஆர். குட்டி பிரசன்னா,
கரூர்.

சீதக்காதி

சீதக்காதி என்ற புலவரை ஔரங்கசீப் என்ற மன்னர் வங்காளத்தின் ஆளுநராக நியமித்தார். கொஞ்ச காலம் அங்கே கவர்னராக இருந்த சீதக்காதி, பிறகு அந்தத் தொழில் பிடிக்காமல் கீழக்கரைக்குத் திரும்பிவிட்டார். 'செய்கு அப்துல் காதிர்' என்ற இவரது இயற்பெயர்தான் நாளடைவில் சீதக்காதி என ஆயிற்று. அதனால்தான் ராஜாஜி வங்கத்தின் கவர்னராக பதவி ஏற்றபோது 'நான் தமிழ் நாட்டிலிருந்து வங்காளத்திற்கு வந்திருக்கும் இரண்டாவது கவர்னர்' என்றார்.

— கே. சுதர்ஷன்

மூன்று கூச்சல்கள்

ஆங்கிலப் பேராசிரியர் திருச்சி சாரநாதன் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது யாரோ "உஸ்.... உஸ்..." என்று சத்தம் செய்தார்கள். உடனே பேராசிரியர், "மூன்றே மூன்று கூச்சல்கள்தான் இப்படி உஸ்ஸென்று இருக்கும். குள்ளவாத்து, நல்ல பாம்பு, முட்டாள் ஆகியோரின் கூச்சல்தான் இது. இந்தக் கூச்சல் யாருடையதோ? எதிரே வந்தால் அடையாளம் தெரிந்து கொள்ளலாம்" என்றார். கூட்டம் அமைதியடைந்தது.

— நெ. இராமன்

படி...படி....

தமிழ்தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தார். வயதானதால் தளர்ந்திருந்த அவரை ஒரு இளைஞர் கைத்தாங்கலாகப் பிடித்து நடத்திவந்தார். படிக்கட்டுகள் இருந்ததால், "ஐயா, படி, படி, ஜாக்கிரதையாக! படிங்க," என்று திருப்பி திருப்பி சொன்னார். உ.வே. சாமிநாத ஐயர், "தம்பி மிக்க மகிழ்ச்சி. இந்த வயதான காலத்திலும் என்னைப் படிக்கச் சொல்லித் தூண்டுகிறீர்களே நன்றி" என்றார். அனைவரும் ஐயாவின் சொல்லாட்சியால் மகிழ்ந்தனர்.


— ஆர். ஏ. ஜெயந்த் பாலாஜி,
ஸ்ரீ சக்தி மெட்ரிக் பள்ளி,
செட்டிபாளையம்.

சைக்கிளில்...

ஒரு மக்கள் சங்கம் டால்ஸ் டாய்க்கு விழா எடுத்துப் பாராட்டியது. சைக்கிள் ஒன்றை


யும் பரிசாக அளித்தது. டால்ஸ்டாய்க்கு சைக்கிள் ஓட்டத் தெரியாது. அப்போது அவரது வயது 70. ஆனாலும் மக்கள் அன்புடன் அளித்தது என்பதால், அந்த முதிய வயதிலும் மூன்று நாட்கள் தொடர்ந்து விடா முயற்சியுடன் பயிற்சி செய்து சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டார் டால்ஸ்டாய்.

— ஆர். ராஜலட்சுமி.





• காந்தி



• ராஜாஜி



• சர்ச்சில்



• உ.வே. சாமிநாத ஐயர்

கணக்கும் சட்டமும்

அலகாபாத் நீதிமன்றத்தில் நடைபெற்ற ஒரு சுவையான நிகழ்ச்சி. ஆங்கிலேய நீதிபதி பென்னட்டின் முன்னிலையில் வசீர்ஹசன் என்ற புகழ்மிக்க வழக்கறிஞர் வாதாடிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு தொகை பற்றிக் கூட்டிச் சொல்வதில் ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டது. உடனே நீதிபதி பென்னட் குறுக்கிட்டு, "நான் இந்தியாவுக்கு வந்த போது இங்குள்ள வழக்கறிஞர்களுக்குக் கூட்டல் கணக்குக் கூட கற்றுத்தர வேண்டியிருக்கும் என்று நினைத்தது இல்லை" என்றார் கேலி தொனிக்கும் குரலில். அதற்கு மிகச் சுவையாகவும், சூடாகவும் வசீர்ஹசன், "கூட்டல் கணக்கில் நான் செய்த தவறைத் திருத்தியதற்காகக் கனம் நீதிபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால் வழக்கறிஞர்களாகிய நாங்கள் உங்களுக்குச் சட்டத்தையே சொல்லிக் கொடுக்க நேர்ந்துள்ள போது நீங்கள் இந்தச் சிறு உதவியையாவது செய்வதில் தவறில்லை" என்றார்.

பேச்சு!

அது போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். லண்டனின் மீது நாள்தோறும் குண்டுமழை விழுந்து கொண்டிருந்த வேளை. சர்ச்சில் பி.பி.சி. வானொலி நிலையத்துக்கு போன் செய்து, தாம் இன்னும் சில நிமிடங்களில் அங்கு வந்து சேருவதாகத் தகவல் தெரிவித்தார். ஏனெனில் அன்றிரவு தேசிய ஒலிபரப்பில் அவர் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சர்ச்சில் அலுவலகத்தை விட்டுத் தன் உதவியாளருடன் வெளியே வந்தபோது, குண்டு வீச்சினால் விளக்குகள் அணைக்கப்பட்டுத் தெருவெங்கும் இருள் சூழ்ந்திருந்தது. ஒரு டாக்சியை நிறுத்தி பி.பி.சி. நிலையத்துக்குப் போகவேண்டும் என்றார். டாக்சி டிரைவரோ, "நான் அவசரமாக வீட்டுக்குப் போக வேண்டும். ரேடியோவில் சர்ச்சில் பேசப் போகிறாராம். அதைக் கேட்டாகவேண்டும். ஆகவே நான் வரமுடியாது" என்றார். டாக்சி டிரைவர் சொன்னதைக் கேட்ட சர்ச்சில் மிகவும் மகிழ்ச்சியடைந்து தன்பேசிலும், தன் பேச்சின் மீதும் அவ்வளவு ஆர்வமாக இருந்த அவருக்கு ஏதாவது அன்பளிப்பு தர விரும்பி தன்கோட்பாக்கெட் பையில் கையை விட்டுப் பத்து பவுண்டு நோட்டு ஒன்றை எடுத்தார். அதைப் பார்த்ததும், சர்ச்சிலின் கையிலிருந்து அதை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டே, "ஏறி உட்காருங்கள் சார். சர்ச்சில் எப்படியாவது போகட்டும். உங்களைக் கொண்டுபோய் பி.பி.சி. நிலையத்தில் விட்டு விடுகிறேன்" என்றார் டாக்சி டிரைவர். சர்ச்சிலின் சந்தோஷம் நொடியில் பறந்தது.

— எஸ். துர்கா காத்யாயனி,
பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு.
புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி.

11. நடப்பது நல்லதாகவே நடக்கும்

புதரை நெருங்கிய கார் சில நொடிகளில் அவர்களைக் கடந்தது. அதற்குள் காரை ஓட்டிய டிரைவரையும், அவனுக்குப் பக்கத்திலிருந்த ஆசாமியையும் நடேசன் நன்றாகப் பார்த்துவிட்டான்.

கார் அவர்களைக் கடந்து சென்றபிறகு, அறுவர் குழு மெதுவாக எழுந்து நின்றது.

நெடுமாறன் நடேசனைப் பார்த்தான். அவன் முகம் கலவரம் அடைந்திருந்தது. மாறன் ஒன்றும் கேட்காமலே, "என்னைக் கடத்திய காரிலிருந்த அதே ஆசாமிகள் தான் இந்தக் காரில் இருக்கிறார்கள். கார் மட்டும் வேறு, மதுர வாயிலில் என்னைத் தேடிய மற்றொரு காரான கறுப்புக்கார் இதுதான். மாறா, எனக்குப் பயமாக இருக்கிறது" என்றான்.

"பயப்படாதே! நாங்கள் இவ்வளவு பேர் இருக்கிறோமே!" என்று கூறிய மாறன், "கார் எங்கே போகிறது என்று பார்க்கலாமா?" என்று கேட்டான்.

அனைவரும் சம்மதிக்கவே அவர்கள் சாலைக்கு வந்தனர்.

தூரத்தில் சென்று கொண்டிருந்த கார், வலப் பக்கம் திரும்பி மறைந்தது.

மாணவர் குழு, இப்போது வேகமாக நடந்து கார் திரும்பிய இடத்தை அடைந்தது. அந்த இடத்தில் வலப் பக்கம் ஒரு மண் சாலை. சுமார் நூறு மீட்டர் தொலைவில் ஒரு பங்களா தெரிந்தது. உயரமான சுற்றுச் சுவர் கொண்ட பங்களா. ஆளுயரத்தை மீறிய கறுப்பு கேட் மூடி இருந்தது.

மாறன் "கார் இந்தக் கேட்டுக்குள்ளேதான் போயிருக்கும். நான் உள்ளே போய்ப் பார்க்கிறேன்" என்றான். அருள் மொழி அதை மறுத்தான். "வேண்டாம். நான் போகிறேன். சுவரைத் தாண்டி உள்ளே செல்ல முடிகிறதா என்று பார்க்கிறேன். முடிந்தால் உள்ளே போகிறேன். இங்கேயும் முட் செடி இருக்கிறது. அதன்பின்னே மறைந்து நில்லுங்கள். அரை மணி நேரம் ஆன பிறகும் நான் வரவில்லை என்றால், டெலிபோன் பூத்துக்குச் சென்று போலீசுக்கு போன் செய்யுங்கள்."


சொல்லிவிட்டு அருள்மொழி அந்த மண் பாதையில் நுழைந்தான். கேட்டை நெருங்கினான். பின்பு அதனை ஒட்டி நடந்து, வடக்குப் பக்கமாகச் சென்றான். அங்கே அவன் நின்று கொண்டிருப்பது நண்பர்களுக்கு நன்றாகத் தெரிந்தது.

திடீரென்று அவனைக் காணோம்.

அருள்மொழி என்ன ஆனான்?

டாக்டர் பூவண்ணன்

அங்கே ஒரு பெரிய குப்பைத் தொட்டி, சுவரை ஒட்டிக் கட்டப்பட்டிருந்தது. உள்ளே இருப்பவர்கள் தொட்டியில் குப்பை கொட்ட வெளியே வர வேண்டியதில்லை. சுவரில் அரை மீட்டர்



சதுரத்தில் ஒரு இரும்புக் கதவு இருந்தது. கதவு உள் பக்கம் திறப்பது. உள்ளேயிருந்து அக்கதவை மேல் நோக்கித் திறந்து, குப்பையை அந்தத் தொட்டியில் கொட்டலாம்.

அருள்மொழி சில வினாடி அதைப் பார்த்தான். சுவர், இரண்டு ஆள் உயரம் கொண்டது. அதில் ஏறி உள்ளே செல்ல முடியாது. இந்தக் குப்பைக் கொட்டும் வழி ஏதாவது உதவி செய்யுமா?

அருள் மொழி மறு நொடி, அந்தத் தொட்டிக்குள் இறங்கினான். குப்பை கொட்டும் வழியை மறைத்த இரும்புக் கதவை மேல் நோக்கி உயர்த்தி, சுவரில் தெரிந்த வழி மூலம் உள்ளே பார்வையைச் செலுத்தினான். சிறுவர்கள் சிலர், கையில் பேப்பர் பிளேட்டுடன் கீழே தரையில் உட்கார்ந்து பிளேட்டின்மீது இருந்த இட்டிலியைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் பார்வையில் நான்கைந்து சிறுவர்கள் தெரிந்தார்கள்.

அக்னிக் குஞ்சுகள்!



இப்போது என்ன செய்வது?

உள்ளே போகலாமா?

யார் இந்தச் சிறுவர்கள் என்று அறிந்து கொண்ட பிறகு உள்ளே நுழையலாமா?

"தம்பிகளா! தம்பிகளா! ஓ, பிரதர்ஸ்! இங்கே பாருங்க! நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?"

அருள்மொழி கேட்டான்.

அவன் குரல் கேட்டு, தட்டில் கவிழ்ந்த தலையை இரண்டு மூன்று பேர் நிமிர்த்தி குரல் வந்த திசையைக் கண்டுபிடித்தனர். ஆனால் பேசவில்லை. அவர்கள் முகத்தில் அளவிட முடியாத சோகம்.

அருள்மொழிக்கு அவர்கள் மௌனம் புரிந்தது. அவர்கள் யாருடனும் பேசக் கூடாது என்று உத்திரவிட்டிருப்பார்களோ? அல்லது அவர்களுக்கருகே யாராவது ஒருவன் நின்று கண்காணித்துக் கொண்டிருக்கிறானோ? அவர்களை எப்படி பேச வைப்பது?

திடீரென்று அருள்மொழியின் மூளையில் மின்சாரம் பாய்ந்ததுபோல ஒரு எண்ணம் பளிச்சிட்டது.

"பூபதி! பூபதி! பூபதி இங்கே இருக்கிறானா? நான் மூவேந்தர் புத்தக வங்கியைச் சேர்ந்தவன். பூபதி... பூபதி.. சிந்தாதிரிப்பேட்டை பூபதி, திருவொற்றியூர் சுந்தரம். இங்கேயிருந்தா வாங்க!"

அருள் மொழியின் குரல் மெல்ல மெல்ல உயர்ந்து ஒலித்தது. வரிசையாக உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவன் எழுந்தான். அவன் தன்னை நோக்கி வருவான் என்று நினைத்தபோது, அவன் மேற்கு நோக்கி நடந்து மறைந்து போனான். சில நிமிடங்களில் அதே சிறுவன் மற்றொருவனுடன் வந்தான். இரண்டு பேரும் அருள்மொழியின் பார்வையில் படும் இடத்தில் நின்றனர். ஒன்றும் பேசவில்லை.

"நீ பூபதியா, சுந்தரமா?"

அருள்மொழி கேட்டான்.

புதிதாக வந்தவன் வலமும் இடமும் முகத்தைத் திருப்பிப் பார்த்தான். யாராவது தன்னைப் பார்க்கிறார்களா என்று கவனிக்கிறான் என்று நினைத்தான் அருள்மொழி.

பிறகு அவன், "நான் பூபதி!" என்றான்.



கிணற்றுக்குள் இருப்பவன் பேசுவது போல என்ற உவமையை அருள்மொழி சில கதைகளில் படித்திருந்தான். பூபதியின் குரல் அப்படி இருந்தது.

''சிந்தாதிரிப்பேட்டை பூபதியா?'' - அருள்மொழி கேட்டான். பூபதி ஆமாம் என்பதைத் தலை அசைப்பின் மூலம் சொன்னான்.

''திருவொற்றியூர் சுந்தரமும் இங்கே இருக்கிறானா?''

அருள்மொழி கேட்டபோது 'இருக்கிறான்' என்றான் பூபதி.

''பூபதி இங்கே வா! இன்னும் அருகே வா! வந்து நீ எப்படி இங்கே வந்தேன்னு சொல்லு!''


அருள்மொழி கேட்டான். மறு நிமிடம் பூபதி மிகவேகமாக அங்கிருந்து வேறு திசையில் நகர்ந்தான். அவனுடன் வந்தவனும் அங்கிருந்து நகர்ந்தான்.

''யார்ரா அங்கே? என்னடா பேச்சு?'' என்ற குரல் ஒலித்தது.

உடனே அருள்மொழி தான் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த இரும்புக் கதவை மெல்ல இறக்கிவிட்டான்.

''சாப்பிட்டாச்சா? போங்கடா, உள்ளே போங்கடா!''

அதே குரலின் கட்டளை கேட்டது. தொடர்ந்து சிறுவர்கள் விரைந்து நடக்கும் சத்தமும் கேட்டது. சில நொடிகளில் அங்கே அமைதி நிலவியது.



அருள்மொழி மெல்ல இரும்புக் கதவை உயர்த்திப் பார்த்தான். அருகே யாரும் இல்லை.

அருள்மொழி யோசித்தான்.

''பூபதியும் சுந்தரமும் இங்கே இருப்பதால், அவர்களைப் போலக் கடத்தப்பட்டவர்கள்தான் மற்ற சிறுவர்கள். அதனால் நேரே போலீசுக்குப் போகலாமா? அல்லது உள்ளே போய் மேலும் விவரம் தெரிந்து கொள்ளலாமா?''

அருள்மொழியின் அச்சம் தவிர்த்த மனம், ஆபத்தை எண்ணிக் கலங்காத மனம் 'உள்ளே போ' என்று உத்திரவிட்டது. அவன் குப்பை வரும் வழியில் கை ஊன்றி, உடலை உயர்த்தினான். பிறகு தன் தலையை முன்னே செலுத்திப் பார்த்தான். அருகே யாருமில்லை. உடனே தன் உடலை மேலும் முன் நோக்கி இழுத்து, உள்ளே குதித்து விட்டான்.

குதித்தவன் அமர்ந்த நிலையிலேயே சில நொடிகள் இருந்து, இருபுறமும் பார்த்தான். யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

மெல்ல எழுந்து நின்றான்.

பங்களாவின் பிரதான வாசல் கிழக்கு நோக்கியிருக்கிறது என்பது அவனுக்குத் தெரியும். அங்கே ஆட்கள் இருக்கக் கூடும். அதனால், பின் வாசலைப் பார்க்கலாம் என்று நினைத்து நடந்தான்.


பின் வாசலில் பெரிய அளவில் கிரில் கதவு - தள்ளி மூடுகிற இரும்புக் கதவு இருந்தது. அதைத் திறக்க வேண்டிய அவசியம் இல்லாமல் ஒரு ஆள் தாராளமாகச் செல்லும் அளவு நடுவில் திறந்திருந்தது.

அருள்மொழி அதன் வழியே நுழைந்தான்.

தன் பார்வையைச் சுழற்றினான். ஆள் அரவம் கேட்கவில்லை. ஆனால் மாடியில் நடக்கும் சத்தம், சிலரோ பலரோ நடக்கும் சத்தம் கேட்டது.


அருள்மொழி கொஞ்சம் முன்னே சென்றான்.

உலகிலேயே அதிக...



உலகிலேயே அதிக நூல் நிலையங்கள் உள்ளது ரஷ்ய நாட்டில்தான். இங்கு சுமார் நான்கு லட்சம் நூல் நிலையங்கள் உள்ளன. நூல் நிலையங்களைப் பராமரிக்கும் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்காக 103 கல்லூரிகள் உள்ளன.

- எஸ்.மோகன்ராஜ், சீர்காழி.



சாரணர் இயக்கம்

பேடன் பாவல் என்னும் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிக்கு சிறுவர்களைச் சிறந்த குடி மக்களாகவும் படிப்பதைத் தவிர இதர வெளிப்புற நடவடிக்கைகளில் திறமையுள்ளவர்களாகவும் பயிற்று விக்க ஒரு இயக்கத்தை ஆரம்பித்தால் என்ன என்று ஒரு புதிய யோசனை 1948ம் ஆண்டு தோன்றியது. அதை அவர் உடனே செயலாக்கத் தீர்மானித்த தன் விளைவாகத் தோன்றியதுதான் 'சாரணர் இயக்கம்.'

- ஆர்.ஆர்.பூபதி,
திண்டுக்கல்

ஒரு புறம் சமையலறை தெரிந்தது. ஆனால் அங்கும் ஆள் இல்லை. அருள்மொழி அதைக் கடந்தபோது பெரிய ஹால் வந்தது. ஹாலின் இருபுறமும் பக்கத்துக்கு இரண்டு அறைகள் இருந்தன. ஒரு அறையின் கதவு பாதி திறந்திருந்தது.

அருள்மொழி உள்ளே எட்டிப் பார்த்தான். ஒரடி எடுத்து உட்புறம் வைத்தான். மற்றோரடி வைப்பதற்குள் அறையின் கதவு சாத்தப்பட்டது. கதவின் முன் புறம் நின்றிருந்த ஒருவன் தான் சாத்தினான். சாத்திய கதவின் தாளை இழுத்துப் போட்டு, அதற்கு முதுகு காட்டி நின்றான்.

தாள் மூடிய சத்தத்தில் திரும்பிய அருள்மொழி எதிரே நல்ல உயரமும், உயரத்துக்கேற்ற பருமனும் கொண்ட ஒரு முரடன் முகத்தில் சிரிப்புத் தவழ நிற்பதைக் கண்டான்.

''யாரப்பா நீ! உனக்குச் சூரப்புலின்னு நினைப்போ? நீ பூபதிக்குத் தெரிஞ்சவனா? சுந்தரத்துக்குச் சொந்தமா? ரெண்டு பேரையும் சொல்லிக் கூப்பிட்டயாமே! அதெப்படி ஒரே சமயத்திலே சிந்தாதிரிப் பேட்டைப் பையனும் திருவொற்றியூர் பையனும் தெரிஞ்சவனா இருக்க முடியும்? சொல்லு!'' என்று கேட்டான் அந்த ஆள்.

அருள்மொழி இதற்குள் குறைந்து கொண்டிருந்த தன் மனவுறுதியைக் கட்டுப்படுத்தின பின், 'எது நடக்கிறதோ, அது நல்லதாகவே நடக்கும்' என்றும் கீதாஉபதேசத்தை- அநேக இடங்களில் அடிக்கடி படித்த வாசகத்தை - நினைத்துக் கொண்டான். 'இந்த பங்களாவுக்குள் வந்ததும், இந்த அறைக்குள் நுழைந்ததும், இப்போது முரடன் முன் சிறைப்பட்டவனைப் போலத் திகைப்புற்று நிற்பதும் நடந்து விட்டன. இவை நல்லதாகவே இருக்கும்; நல்லதாகவே நடக்கும்' என்று நினைத்தான்.

''என்னடா பொடியா, கேள்வி கேட்டா . பதில் சொல்லாம நிக்கறே?'' என்று கேட்டான் முரடன்.

இதற்குள் அருள்மொழிக்கு இழந்த தைரியம் மீண்டும் வந்தது.

''எனக்குத் திருவொற்றியூர் சுந்தரம் தெரியும்! சிந்தாதிரிப்பேட்டை பூபதி தெரியும். திரு.வி.க. பள்ளியிலிருந்து நீங்க கடத்திப் பிடிச்ச - உங்கப் பிடியிலேருந்து தப்பின - நடேசனைத் தெரியும். ஷெனாய் நகர் மாநகராட்சிப் பள்ளியின் சிறந்த மாணவர்கள் என்று அப்பள்ளியின் தலைமையாசிரியர் குறிப்பிட்டவர்களையும் தெரியும்'' என்று மிடுக்காகச் சொன்னான்.

''ஏய், யார் நீ? இப்பச் சொன்னதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?'' என்று கேட்ட முரடனின் குரலில் ஒரு வகை நடுக்கம் தெரிந்தது.

''புத்திசாலி மாணவர்களைக் கடத்திப் போகிற உனக்குப் போதுமான புத்தியில்லை என்பதும் தெரியும்! அனேகமாக இந்நேரம் என்னுடன் வந்த நண்பர்கள் போலீஸை அழைத்துக் கொண்டு இங்கே வந்து கொண்டிருப்பார்கள் என்பதும் அவர்கள் உன் கூட்டத்தையே கைது செய்யப் போகிறார்கள் என்பதும் தெரியும்.''

தடுமாற்றமற்ற உறுதியான குரலில்

அருள்மொழி சொல்லும்போதே, அப்பங்களாவின் 'கேட்' கிறீச்சிட்டுத் திறக்கும் சத்தத்தைத் தொடர்ந்து லாரியோ, வேனோ உள்ளே வரும் சத்தம் கேட்டது.

முரடன் நடுங்கினான்.

"இந்தப் பையன் குறிப்பிட்ட போலீஸ் வேன் தான் வருகிறதோ?" என்று அஞ்சியபடி அறைக்கதவின் தாளைத் திறந்து அவன் வெளியே வந்தான். வந்து அறைக் கதவைச் சாத்தி வெளிப்புறம் தாளிட்டான்.

அதற்குள் அவனை நோக்கி வந்த ஒருவன், "ஐயா, பசங்களை ஏற்றிச் செல்ல நாம வரச் சொன்ன வேன் வந்துட்டது" என்றான்.

அதைக் கேட்டு ஓரளவு திருப்தியடைந்த முரடன், "சரி, மளமளன்னு பசங்களை வேனில் ஏத்து, இன்னும் சில நிமிஷத்தில் இங்கிருந்து போகணும்" என்றான்.

வந்தவன் ஓடினான்.

முரடன் தன் உடமைகளைச் சேகரிக்க விரைந்தான்.

அடுத்த பதினைந்து இருபது நிமிஷத்தில் பங்களாவைக் காலி செய்து, அங்கிருந்த சுமார் பதினைந்து சிறுவர்களையும் வேனில் ஏற்றி, தன் பணியாளரையும் வேனில் ஏற்றினான். பங்களா கதவை மூடி பூட்டுப் போடவும் மறந்தபடி முரடன் ஓடிப்போய் வேனின் முன் பகுதியில் டிரைவர் பக்கத்தில் அமர்ந்தான்.

டிரைவர் பங்களாவின் கேட் மூடியிருப்பதைப் பார்த்து, அவனே போய் இரண்டு கதவுகளையும் திறந்தான். திறந்தவன் பார்வையில் 'ஓ' என்ற பெருஞ் சத்தத்தத்தோடு பல நூறு சிறுவர்கள்-காக்கி உடையணிந்தவர்கள், கையில் தடியேந்தியபடி மண் சாலையில் வந்து கொண்டிருந்த காட்சி தெரிந்தது.

முரடன் வேனிலிருந்தபடி பார்த்தான். "என்ன நடக்கிறது? யார் இவர்கள்? எங்கே வருகிறார்கள்?"

முரடன் யோசிப்பதற்குள் அந்த மாணவர் வெள்ளம் பங்களாவின் வாயிலை நோக்கிப் பாய்ந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

கைக்கடிகாரங்கள் பெற்றவர்கள்!

டிசம்பர் போட்டி கடினமாக இருந்திருக்கிறது என்பதைப் போட்டிக்கு வந்திருக்கும் கடிதங்கள் மூலம் அறிய முடிகிறது. சரியான விடை எழுதிய சிலரில் இருந்து இருவர்



பரிசுக்குரியவர்களாகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு பெற்றவர்கள்:

1. வி.பி. கவிதா,
ஆறாம் வகுப்பு,
சுப்பையா வித்யாலயா பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி.

2. என். நாகலக்ஷ்மி,
இரண்டாம் வகுப்பு,
ஹோலிகிராஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி,
குரோம்பேட்டை, சென்னை.

சரியான விடை


1. *காஸ்பரோ - செஸ்*
2. *மைக்கேல் ஜான்சன் - ஓட்டப் பந்தயம்*
3. *பிராட்மென் - கிரிக்கெட்*
4. *காபிரியலா சபாடினி - டென்னிஸ்*
5. *மரடோனா - கால்பந்து*
6. *தன்ராஜ்பிள்ளை - ஹாக்கி*


பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

கிணற்றில் விழுந்த கோழி!

தெருவில் விளையாடிக் கொண்டிருந்த தம்பி ஓடி வந்து வீட்டுக்குள்ளே இருந்த அம்மாவிடம், "கோழி கிணற்றில் விழுந்துவிட்டது" என்று சொல்ல அம்மா பதறியடித்துக் கொண்டு கிணற்றுக்கு வந்து எட்டிப் பார்த்தார். கோழியைக் காணவில்லை. தற்செயலாக அவர் திரும்பிப் பார்த்தபோது கோழி திண்ணையில் உட்கார்ந்திருந்தது. உடனே அவர் தம்பியிடம் விசாரிக்க, "நான் வைத்து விளையாடிக் கொண்டிருந்த 'கோலி'குண்டுதான் கிணற்றில் விழுந்துவிட்டது" என்று சொல்ல அந்தக் கோபத்திலும் அம்மாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்





டக்

இந்திய - மேற்கு இந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டி (கிரிக்கெட்) நடந்து கொண்டிருந்தபோது, டெண்டுல்கர் 'டக்' அவுட் ஆனார். என் அண்ணன் " 'டக்' அவுட்னா என்னனு தெரியுமா?" என்று தம்பியைக் கேட்டான். "ஒரு பேட்ஸ் மேன் டக்னு (சீக்கிரம்) அவுட் ஆயிட்டா அது 'டக்' அவுட்" என்று சொன்னான் தம்பி. அவன் சொன்னதும் ஓரளவு சரிதான் என்று நினைத்து சிரித்தோம்.

-ஹ. அருண்குமார், பத்தாம் வகுப்பு, ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம்.

வெற்றிலை

எங்கள் வீட்டில் எல்லாரும் சாப்பிட்ட பின் என் தாத்தா வெற்றிலைப் போட்டுக் கொண்டிருந்தார். அதைப் பார்த்துவிட்டு என் தம்பி "நானும் வெத்தலை போடப் போறேன் தாத்தா" என்று சொன்னான். உடனே எங்கள் தாத்தா 'நீ எல்லாம் வெத்தலை போடக் கூடாது. போட்டால் கோழி முட்டப் போகுது" என்று சொன்னார். உடனே என் தம்பி சொன்னான் "தாத்தா மாடுதான் முட்டும். கோழி முட்டாது. கோழி கொத்தத்தான் செய்யும்" என்று சொன்னான், வீட்டில் எல்லோரும் சிரித்துவிட்டோம்.

- சி. இராஜசேகரன், விருதுநகர் மாவட்டம்




எங்கள் ஊரில் நடந்தது!


...ங்கள் ஊரில் நடந்தது!

மடை ஓடுமா?

வெளியூரிலிருந்து வந்த மாமாவிடம் அப்பா பேசிக் கொண்டிருந்தார். அப்பா "ஊரில் மழை தண்ணியெல்லாம் எப்படி?" என்று கேட்டார். மாமா "சரியான மழை பெய்து எல்லா மடையும் ஓடுது! தண்ணிக்குக் கவலையில்லை" என்றார். அருகில் நின்று கொண்டிருந்த தம்பி "மழை பெய்தால் தண்ணீர்தானே ஓடும் மாமா. மடையுமா ஓடும்?" என்று குறும்புடன் கேட்க மாமாவும், அப்பாவும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

- ப. காளிதாசன், நீர்விளங்குளம்





பரிசு


சமீபத்தில் என் தங்கைக்குப் பிறந்த நாள் வந்தது. அதை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினோம். அப்போது எங்கள் உறவினர் ஒருவர் ஒரு விளையாட்டுப் பொருளைக் கொடுத்து, "இதை அடுத்த பிறந்த நாள் வரைக்குமாவது பத்திரமாக வைத்திரு" என்று கூறினார். அவளும் 'சரி' என்றாள். அதற்கு அடுத்த வாரம் அவருக்குத் திருமணம் நடைபெற்றது. என் தந்தை அவளிடம் நாங்கள் வாங்கிய 'கிப்டை' கொடுத்து அவரிடம் கொடுக்கச் சொன்னார். அவளும் அதைக் கொடுத்துவிட்டு, ''அடுத்த கல்யாணம் வரைக்குமாவது பத்திரமாக வைத்திருங்கள்'' என்று கூறினாள். அதைக் கேட்ட உடன் அனைவரும் மேளச் சத்தத்தைவிட அதிக சத்தமாகச் சிரித்து விட்டோம். உடனே என் தந்தை "அடுத்த திருமண நாள் வரையாவது" என்று திருத்தினார்.

- எம்.வினோத், விருதாச்சலம்

ஏறவே இல்லை

வீட்டில் அம்மாவிடம் பேசிக் கொண்டிருக்க பக்கத்து வீட்டு அக்கா வந்திருந்தார். இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது அவர், "என் பையன் ஒல்லியாகவே இருக்கிறான். சாப்பிட என்னென்னவோ வாங்கிக் கொடுத்தும் உடம்பு ஏறவே இல்லை. உடம்பு ஏற என்ன பண்றதுன்னு தெரியல" என்றார். இதைக் கேட்ட எங்கள் வீட்டு வாண்டு, "ஆன்ட்டி உங்க பையன் உடம்புக்குப் பக்கத்துல ஏணி வையுங்க. ஏறும்" என்று சொல்லிவிட நாங்கள் சிரித்த சிரிப்பில் அவரும் சேர்ந்து சிரித்து விட்டார்.

- எம்.மகேஷ், தாரமங்கலம்



18 ஆளப்பிறந்தவன்

கதை: ராஜி படம்: லலிதா




ஜெயசிம்மனை, பிரபாகரன் சந்தித்தார்.
இளவரசே! தாங்கள் மலைக் கோயிலுக்குச் செல்ல முடிவு செய்திருக்கிறீர்கள் போலிருக்கே?
ஆமாம். அது கூடாது என்று தடுக்க வந்திருக்கிறாயாக்கும் நீ? அப்படித்தானே?
அரசே! அது நமது எதிரி வீரசிம்மனின் செல்வாக்குள்ள பகுதி. ஆகவேதான்... எச்சரிப்பது என் கடமையல்லவா?
சரி, சரி. நான் எங்கும் போகவில்லை. நீ கவலையின்றிப் போகலாம்.
வீரசிம்மனுக்குப் பயந்து கொண்டு மலைக்கோயில் திருவிழாவுக்குப் போகாதிருப் பதா? சோமுவிடம் நான் வருவதாகக் கூறிவிட்டேன். போகாமலிருக்கலாமா?
மாறுவேடத்தில் போனால் என்ன? அதுதான் சரி.


லைலா அரண்மனையில் இருப்பதால் நானும் அங்குதான் இருப்பேன் என்று பிரபாகரனும் எண்ணிக் கொண்டிருப்பார்.
ஜெயசிம்மன் மலைக்கோயிலை அடைந்தான்.
வா; ஜெயசிம்மா, லைலா வரலையா? வழியில் ஆபத்தில்லையே?
யாருக்கும் என்னை அடையாளம் தெரியாததால் கவலை யில்லை.
சரி, வா திருவிழாவைச் சுற்றிப் பார்க்கலாம்.
சோமு, என்னைவிட நீயே கொடுத்து வைத்தவன். எவ்வித கட்டுக்காவலும் இன்றி உன்னால் எதிலும் கலந்து கொள்ள முடிகிறது.


சோமு, அதோ அங்கே என்ன பெரிய கூட்டம்? அருகில் சென்று பார்க்கலாம்.
கரடி வித்தைக்காரனாக இருக்கும்.
இவ்வளவு பெரிய மிருகம் இவனிடம் எப்படி அடங்கி ஆடுகிறது- பார், சோமு! ஓடிப்போய் தேன் வாங்கிட்டு வா. கரடிக்கு ரொம்பப் பிடிக்கும்.
சோமுவிடமிருந்து தேனை வாங்கி கரடிக்கு ஊற்றினான் ஜெயசிம்மன்.
ஐயா, இனி இந்தக் கரடி உங்களை மறக்கவே மறக்காது.
- தொடரும்

பார்த்துட்டேன்... பார்த்துட்டேன்!



பூங்குளம் என்ற கிராமத்தில் கந்தசாமி என்ற நெசவாளி இருந்தான். அவன் மிக பாடுபட்டு உழைத்தும் கூட கஷ்டம் தீர வில்லை. ஒருநாள் அந்த ஊருக்கு ஒரு சாமியார் வந்தார். அதை அறிந்து உடனே அவரைக் காணச் சென்றான் கந்தசாமி. சாமியாரிடம் போய் அவரை சாஷ்டாங்கமாக வணங்கிவிட்டு, தன் கஷ்டம் நீங்க வழி கேட்டான் அவன். உடனே அவர், 'நீ நாள்தோறும் காலையில் குளித்து, பூஜை செய்து புறப்படு. உன் வறுமை அகலும்'' என்றார். ஆனால் கந்தசாமியோ, ''ஐயா! எனக்கு அதற்கெல்லாம் நேரம் இல்லீங்க!' என்றான். ''அப்படியானால் திருநீறு இட்ட ஒருவரைப் பார்த்துவிட்டுப் பிறகு உணவருந்து'' என்றார் சாமியார்.

''சரி ஐயா! அப்படியே செய்கிறேன்'' என்றான் கந்தசாமி. நாட்கள் சில நகர்ந்தன.

ஒரு நாள் திருநீறு அணிந்த எவரும் கண்ணில் தென்படவில்லை. அவன் மனைவி கண்ணம்மா, கந்தசாமியிடம், ''பக்கத்து தெரு சுப்பண்ணாவைப் போய் பார்த்துவிட்டு வாருங்கள், அவர் பூஜை தவறாது செய்பவர்'' என்று கூறினாள். அவள் சொன்னபடியே அவர் வீட்டுக்கு உடனே சென்றான் கந்தசாமி. ஆனால் வீடு பூட்டியிருந்தது.

ஏமாற்றத்துடன் திரும்பியவனின் பார்வை எதிரில் பானைகள் செய்யும் குயவனின் மீது விழுந்தது. பானை செய்ய மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்த குயவன் 'டங்' என்று சத்தம் கேட்க, மேலும் தோண்டினான். ''ஆ! புதையல்!'' என்று ஆச்சரியத்துடன் கையில் எடுக்க, அதே சமயத்தில் கந்தசாமியும் ''ஆஹா! பார்த்து விட்டேன்'' என்று சொல்லி திரும்பி ஓட முற்பட்டான். குயவன், ''இந்தாப்பா நில்!'' என்றுகூற, ''ஆஹா! பார்த்து விட்டேன்'' என்று மறுபடியும் கந்தசாமி கூற, குயவன் கந்தசாமியைப் பிடித்துக் கொண்டான்.

''ஆமாம்! பார்த்துட்டே. நான் இல்லேன்னா சொல்றேன். ஒரு குடம் தங்ககாசு புதையலா கிடைச்சிருக்கு. இதை யாரிடமும் சொல்லாதே, ஆளுக்குப் பாதியாக எடுத்துக் கொள்வோம்'' என்று குயவன் கூறினான். அப்போதுதான் கந்தசாமிக்குப் புதையல் விவரம் தெரிந்தது. 'அட, திருநீறு இட்டவரைப் பார்த்ததற்கே இப்படிப் பட்ட அதிர்ஷ்டம் என்றால், தினமும் குளித்து கடவுளை வணங்க ஆரம்பித்தால் எத்தகைய வாழ்க்கை வாழலாம்' என்று சிந்தித்தபடி நடந்தான் கந்தசாமி.

- ஆர்.சாரதா, சென்னை.

விற்பனையாகாத பீப்பாய் எது?

I. எண்ணெய்க் கடையில் வெவ்வேறு அளவுள்ள 6 பீப்பாய்களில் முறையே 62, 40, 38, 36, 32, 30 லிட்டர் அளவுகளில் எண்ணெய் இருந்தது.

இரண்டு வணிகர்கள் எண்ணெய் பீப்பாய்களை விலைக்கு வாங்க வந்தனர். ஒரு வணிகர் மூன்று பீப்பாய்களை வாங்கினார். இரண்டாம் வணிகர் இரண்டு பீப்பாய்களை வாங்கினார். ஒரு பீப்பாய் மீதம் இருந்தது.


எண்ணெயைக் கணக்கிட்டதில் இரண்டாம் வணிகர் வாங்கியதைப் போல் இரண்டு மடங்கு அளவுள்ள எண்ணெய் முதலாம் வணிகரிடம் இருந்தது.

அப்படியானால் விற்பனையாகாமல் இருந்த பீப்பாயில் எத்தனை லிட்டர் எண்ணெய் இருக்கும்?

இரு வணிகர்கள் வாங்கிய பீப்பாய்களில் இருந்த எண்ணெய் அளவு எவ்வளவு?

- **ஔவை யோகானந்தம்.**

II.



இங்குள்ள 8 கட்டங்களிலும் 1 முதல் 8 வரை எண்களை நிரப்ப வேண்டும். ஒரு எண்ணுக்கு அருகில், எதிர் கட்டங்களில் அந்த எண்ணின் முன் அல்லது பின் வரும் எண் வரக்கூடாது (உதாரணம் 2-ன் அருகில், எதிரில் 1 (அ) 3 வரக்கூடாது)

- **கே.விஷ்ணுப்ரியா, மன்னார்குடி**

III. தந்தை ஒருவரது வயதைத் திருப்பிப் போட்டால் அவரின் இளைய மகனின் வயது வரும். அந்த தந்தையின் வயதில் இருந்து இளைய மகனின் வயதைக் கழித்தால் மூத்தமகனின் வயது வரும். இளையவனுக்கும், மூத்தவனுக்கும் இரண்டு வயது தான் வித்தியாசம். இவர்கள் மூவரின் வயதைக் கூட்டினால் 104 வரும். அப்படியென்றால் இந்த மூன்று பேரின் தனித்தனி வயது என்ன?

IV. ஒரு மூன்று இலக்க எண்ணில் மூன்றாவது எண்ணால் முதல் இரண்டு எண்களை வகுத்தால் வரும் விடை, முதல் எண்ணால் அடுத்த இரண்டு எண்களை வகுத்தால் வரும் விடை ரிவர்ஸில் இருக்குமெனில் அந்த மூன்று இலக்க எண் என்ன?

- **எம்.வினோத், விருத்தாசலம்**

V. ஒரு பழ வியாபாரி தன்னுடைய நாலு பிள்ளைகளையும் கூப்பிட்டு மூத்தவன் ராமுவிடம் 49 பழங்களையும், இரண்டாவது சோமுவிடம் 39 பழங்களும், மூன்றாவது பாலுவிடம் 29 பழங்களும், நாலாவது மகன் வேலுவிடம் 19 பழங்களும் கொடுத்தார். உங்களிடம் தந்திருக்கும் பழங்களை ஒரே விலைக்குத் தான் விற்க வேண்டும். விற்று வரும் தொகையும் ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும் என்றார். நால்வரும் அப்படியே விற்று 9 ரூபாய் மீதம் கொண்டு வந்தார்கள் எப்படி தெரியுமா?


- **ஆர். சிவபெருமாள், குமரிமாவட்டம்.**



விடை 64ஆம் பக்கம்


நீர் யானை

ஆழி




நீர்யானையை ஆங்கிலத்தில் 'ஹிப்போ போடமஸ்' என்பார்கள். 'நீர்க் குதிரை' என்றும் சில வெளி நாடுகளில் கூறுகிறார்கள். எனினும் இது பார்ப்பதற்குக் குதிரையைக் காட்டிலும் பன்றியைப் போலத்தான் இருக்கும்! யானையின் இனம் அல்ல நீர்யானை!


நீர்யானைகள் ஆப்பிரிக்காவின் காட்டுப் பகுதி களில், ஆறு களில், ஏரி களில் அதிகம். ஆற்றின் ஓரங்களில் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன.




நீர்யானை ஒரு நாளின் பெரும் பகுதியை நீரிலேயே கழிக்கும். தண்ணீருக்குள் முழுவதுமாக அமிழ்ந்திருந்தாலும், எளிதாக சுவாசிப்பதற்கு ஏற்றபடி இதன் மூக்குத் துளைகள் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். இது இரவு நேரங் களில் நீரிலிருந்து வெளியே வந்து மேயும்.


நீர் யானையின் இரை இளம் தளிர்கள். அது ஒரே இரவில் 40 கிலோ தழை களைத் தின்று அழித்து விடும்! தாவரங்களுக்கு இது எதிரிதான்!






மிகப் பெரிய
ஆப்பிரிக்க
நீர் யானை
4 மீட்டர் நீளமும்
3200 கிலோ
எடையும்
இருக்கும்!






சிறிய குள்ளமான நீர் யானை இனமும் இருக்கிறது. இதை 'பிக்மி' நீர் யானை என்பார்கள். 2 மீட்டர் நீளமும், 275 கிலோ எடையும் இருக்கும்.



ஆற்று நீரின் அடியில் அதிவேகமாக நீர்யானை ஓடக்கூடியது! நீரின் அடிமட்டத்தில் இது 10 நிமிடங்கள் அமிழ்ந்து இருக்க முடியும்!




நீர் யானையின் உடலில் வியர்வைச் சுரப்பிகள் அதிகம் கிடையாது. உடலில் உரோமங்களும் இல்லை. இதனால் கொஞ்ச நேரத்திற்குக் கூட சூரிய வெப்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது. இதன் உடலில் உள்ள நீர் மிக விரைவில் ஆவியாகி வெளியேறும். அதனால்தான் பகலில் நீருக்குள்ளேயே மூழ்கிக் கிடக்கும். இதன் தோலில் சிவப்பு நிறச் சுரப்பிகள் இருப்பதால், இதன் உடலிலிருந்து வெளியேறும் திரவம் இரத்தம் போல் சிவப்பாக இருக்கும்! இந்தச் சிவப்பு நிறச் சுரப்பியால்தான் இதன் உடல் சூடு ஆகாதபடி பாதுகாக்கப்படுகிறது.




நீர்யானை நீருக்குள் மூழ்கிய படியே தூங்கும். வெளிக்காற்றைச் சுவாசிக்கத் தூங்கிக் கொண்டே நீர் மட்டத்திற்கு மேல் மூக்கை நீட்டும்.

நீர் யானைக்குத் தந்தங்கள் போன்ற நீண்ட கோரைப் பற்கள் உண்டு. 50 செ.மீ. நீளமும் 2 கிலோ எடையும் இருக்கும். அளவில் சிறியவையாக இருந்தாலும், யானையின் தந்தங்கள் போலவே, இதன் தந்தங்களும் விலை மதிப்பு மிக்கவை.




நீர் யானை ஒரே ஒரு குட்டிப் போடும். குட்டி பிறந்தவுடன் 42 கிலோ எடை இருக்கும். குட்டி, தாயுடன் சுமார் 20 நாட்கள் வரை தான் இருக்கும். பிறகு தனியாகப் பிரிந்து போய் மேயத் தொடங்கி விடும். குட்டி பிறந்தவுடனே நீரில் நீந்தத் தொடங்கிவிடும்! தாயின் முதுகில் உட்கார்ந்து கொண்டு நீரில் பய ணிக்கும்!




குட்டி போட்ட தாய் நீர்யானை வெகுதூரம் போய் மேய வேண்டுமானால், தன் குட்டியை வேறு ஒரு பெண் நீர்யானையிடம் பாது காப்பாக விட்டுவிட்டுத்தான் போகும்!

நீர் யானைக்குக் காயம் பட்டால் வெகு விரைவில் ஆறிவிடும்! 45 ஆண்டுகள் உயிர் வாழும்!









நீர் யானையின் பல் இடுக்கில் உணவுத் துணுக்குகள் அதிகமாகத் தங்கிவிட்டால், அது வாயைப் பிளந்து கொண்டு கரையோரம் படுத்திருக்கும். நாய், அதன் வாயில் உள்ள உணவுத் துணுக்குகளைத் தின்று, சுத்தம் செய்துவிட்டுப் போகும்!

'ஈக்ரெட்' என்னும் பறவை, நீர்யானையின் மேல் எப்போதும் உட்கார்ந்து கொண்டிருக்கும். அது போகும் இடங்களுக்கெல்லாம் இதுவும் போகும்! நீர்யானையின் உடலில் உள்ள ஒட்டுண்ணிப் பூச்சிகளைப் பிடித்துத் தின்று இரையாக்கிக் கொள்ளும் ஈக்ரெட் பறவை. அத்துடன் நீர்யானைக்கு ஆபத்து வரும்போல் இருந்தால், குரல் எழுப்பி எச்சரிக்கை செய்யும்!



பொதுவாக நீர்யானை சாதுவான பிராணிதான். ஆனால் சிலசமயம் பயங்கரமாகக் கோபம் வந்துவிடும். அப்போது தன் பெரிய தலையால், எதிர்ப்படுகிற விலங்குகளையோ மனிதர்களையோ மோதித் தாக்கும்!





கண் இழந்தும் சிலை வடித்தவர்!



மூத்தராசன் என்ற சோழ மன்னன் ஒரு திறமையான சிற்பியிடம் முருகனின் வடிவம் அமைக்கும் பணியை ஒப்படைத்திருந்தான். சிற்பி அற்புதமாக வேலவனின் உருவத்தைச் சமைத்தான். அந்த வடிவம் சிக்கலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சிங்காரவேலன் என்று நாமம் சூட்டிய அரசர் சிற்பிக்கு ஏராளமாகப் பரிசளித்தார்.

அதேசமயம் இன்னொரு அழகிய சிலையை இந்தச் சிற்பி அமைக்கக்கூடாதென்றும் நினைத்தார். தன் பெருமையே உலகில் நிலைக்க வேண்டும் என்று பேராசை கொண்டார்.

சிற்பியிடம் ''நான் உனக்கு நிறைய வெகுமதி கொடுத்தேன். நான் ஒரு பரிசு கேட்டால் நீ தருவாயா?'' என்று கேட்டார். ''என்னால் கொடுக்கக்கூடியதானால் நான் சிறிதளவும் தயங்க மாட்டேன்'' என்றான் குணசாலியான சிற்பி.

''உன் கட்டை விரல் வேண்டும்'' என்றார் மன்னர். சிறிதும் தாமதியாமல் ஏகலைவனைப் போல் வெட்டிக் கொடுத்தான் சிற்பி.

அடுத்து எட்டுக்குடியில் ஆறுமுகனுக்குச் சிலை அமைக்கும் பணியை ஒப்புக்கொண்டிருந்தான் சிற்பி. ''எப்படி செய்யப் போகிறீர்கள்?'' என்று கவலைப்பட்டாள் மனைவி.

''சண்முகரும், அன்புள்ள நீயும், மனத்தில் உறுதியும் இருக்கும்போது ஏன் குழம்புகிறாய்?'' என்று சமாதானம் சொன்ன சிற்பி சண்முகப் பெருமானின் சிலா வடிவத்தை அற்புதமாகச் செய்துகொடுத்தான். கும்பாபிஷேகத்தின்போது பரிசுகள் கொடுத்து கௌரவித்த அரசன்,

'இனி, இவன் இதுபோல் சிறப்பாக வேறு ஒரு சிலை செய்யக்கூடாது' என்ற அகந்தையில் சிற்பியின் கண்களைக் குருடாக்க உத்தரவிட்டான்.



''சரவணபவா, கார்த்திகேயா! இது நியாயம்தானா?'' என்று கதறினாள் மனைவி.

''அன்பா! கண்கள் போயிற்றே என்று கலங்காதே! மீண்டும் எனக்கொரு வடிவம் அமைக்க வேண்டும்'' என்று கனவில் கட்டளையிட்டான் கந்தவேள்.

எழுந்து துணைவியிடம் கனவைக் கூறினான் சிற்பி. ''எப்படி முடியும்?'' என்று கலங்கினாள் மனைவி.

கனவில் முருகன் காட்டிய இடத்தைக் கூறி அங்கு அழைத்துச் செல்லுமாறு துணைவியிடம் கேட்டுக்கொண்டான். அந்தப் பாறையில் மயிலின் கால்களைப் போல் அடையாளம் இருக்குமிடத்தில் தன் உளி பிடித்த கையைக் கொண்டு போகச் சொன்னான். இப்படியே மனைவியின் உதவியோடு தினமும் சிலை செதுக்கினான் கண்ணில்லாத சிற்பி. பார்ப்பவர் பிரமிக்குமளவு சிற்பம் உருவாயிற்று. சிற்சில வேலைகளே பாக்கி. ஒரு நாள்...

சிற்பியின் மனைவி சிலையைத் தொட்டுக்கொண்டிருக்க, அவள் விரலின் மேல் தன் கையை வைத்து வழக்கம்போல் சிற்பி உளியால் அடிக்க, உளி சிலையில் படுவதற்குப் பதிலாக மனைவியின் கையைச் சிதைக்க அவள் ''முருகா'' என்று அலறினாள்.

இரத்தம் பீறிட்டு சிற்பியின் ஊனியான கட்டை விரலிலும், கண்களிலும் தெறிக்க, 'பளீரென்று' பார்வை வந்தது சிற்பிக்கு! கட்டை விரலும் முழுமையாயிற்று.

சிற்பியும், அவன் மனைவியும் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை! முருகனைப் பாமாலைகளால் போற்றினர்.

தன் எண்ணங்களையே கண்களாகக் கொண்டு சிற்பி சிலை வடித்த இடம் 'எண்கண்' என்று புகழ் பெற்றது.



ஆர். பொன்னம்மாள்



பந்து

தளவை இளங்குமரன்

பந்து நல்ல பந்திது!
பார்க்க அழகுப் பந்திது!
உந்தி எழும்பும் பந்திது!
உயரக் குதிக்கும் பந்திது!

காற்ற டைத்த பந்திது!
கைய டக்கப் பந்திது!
போற்றி ஆடும் பந்திது!
புதிய வண்ணப் பந்திது!

தம்பி தங்கை என்னுடன்
தாவி ஆடும் பந்திது!
அம்மன் கோவில் சந்தையில்
அப்பா வாங்கித் தந்தது!

பள்ளி விட்டு வந்ததும்
பாய்ந்து ஆடும் பந்திது!
உள்ளம் உடம்பில் வன்மையை
ஊட்ட வல்ல பந்திது!

புதிர் உலக விடைகள்

I. *முதல் வணிகர் வாங்கிய மூன்று பீப்பாய்களில் 62+38+32=132*

இரண்டாவது வணிகர் வாங்கிய 2 பீப்பாய்களில் 36+30 = 66 லிட்டர்

விற்பனையாகாமல் இருந்த பீப்பாயில் 40 லிட்டர் எண்ணெய் இருக்கும்.

II.

	6	4	
2	8	1	7
	5	3	

III.

III. *தந்தையின் வயது*	-	*52*
மூத்த மகனின் வயது	-	*27*
இளைய மகனின் வயது	-	*25*
மொத்தம்	-	*104*

IV. *262*

26 ÷ 2 = 13

62 ÷ 2 = 31

V. *ராமு டஜன் 2 ரூபாய் வீதம் 4 டஜன் பழங்களை 8 ரூபாய்க்கும் ஒரு பழத்தை ஒரு ரூபாய்க்கும் விற்றான்.*

சோமு மூன்று டஜன் பழங்களை 2 ரூபாய் வீதம் 6 ரூபாய்க்கும் மீதி 3 பழங்களை ஒரு ரூபாய் வீதம் மூன்று ரூபாய்க்கும் விற்றான்.

மூன்றாவது பாலு 2 டஜன் பழங்களை 4 ரூபாய்க்கும் மீதி 5 பழங்களை ஒரு ரூபாய் வீதம் 5 ரூபாய்க்கும் விற்றான்.

வேலு ஒரு டஜன் 2 ரூபாய்க்கும் மீதி ஏழு பழங்களை ஏழு ரூபாய்க்கும் விற்றான்.

ஆளுக்கு 9 ரூபாய் கொண்டு வந்தார்கள்.



முரட்டுக் காளையும் சண்டிக் குதிரையும்

ஜல்லிக் கட்டு என்ற வீர விளையாட்டைக் கண்ணனும் விளையாடியிருக்கிறான்! ஒரு நாள் மாலை நேரத்தில் பிருந்தாவனத்தில் மேய்ந்து கொண்டிருந்த பசுக்களைத் திரும்ப அழைக்க கண்ணன் குழலூதிக் கொண்டிருந்தான். அந்த இனிய இசைக்குக் கட்டுப்பட்டு பசுக்களும் கன்றுகளும் அவனை நோக்கி வந்தன. அப்போது திடீரென்று ஒரு பெரிய காளை, பசு - கன்றுகளிடையே புகுந்து அவற்றை முட்டி மோதி காயப்படுத்தியது. அதனைப் பிடிக்க வந்த இடைச் சிறுவர்களை விரட்டி அடித்து விட்டு, கடைசியாக அந்த முரட்டுக் காளை கண்ணனை நோக்கியே பாய்ந்தது.

கண்ணன் புன்னகையுடன் அதன் பாதையிலிருந்து விலக, காளை ஒரு மரத்தை முட்டிச் சாய்த்து விட்டுத் திரும்பி, மறுபடி கண்ணனை நோக்கியே நிலமதிர ஓடி வந்தது. கண்ணன் தக்க சமயத்தில் அதன் பாதையிலிருந்து விலகி அதன் வாலைப் பிடித்து சுழற்றி அடித்தான். பின்னர் கொம்புகளை லாகவமாகப் பற்றி அதன் கழுத்தை முறிக்க முற்பட்டான். அப்போதும் திமிறிய காளைமீது பலமாக வலது கரத்தால் ஓங்கி ஓர் அடி வைத்தான். அது அசுர ரூபமடைந்து கீழே விழுந்து மாண்டது. அரிஷ்டாசூரன் என்பவன்தான் அப்படி ஒரு முரட்டுக் காளை ரூபத்தில் வந்திருந்தான்.

இதன்பிறகு கேசி என்ற அசுரன் கம்சனால் ஏவப்பட்டு முரட்டுக் குதிரை வடிவில் வந்தான், கண்ணனைக் கொல்லும் நோக்கில். கண்ணன் அந்தக் குதிரையையும் அடக்கி அசுரனை வதம் செய்தான்.

அப்புறம் வியோமாசூரன் என்பவன் இடையர் குலச் சிறுவன் போலவே ரூபம் தரித்து வந்து, அவர்களுடன் விளையாடியபடியே ஒவ்வொருவராகப் பிடித்துக் கொண்டு போய் ஒரு குகையில் சிறை வைத்தான். தன்னை விழுங்க வந்த அவனை கண்ணன் போரிட்டு அழித்தான்.

'மாடு ரூபத்திலும் மனித உருவிலும் குதிரை வடிவிலும் அசுரர்கள் வருவதாவது, அவர்களை வதம் செய்வதாவது? எல்லாம் கட்டுக் கதை' என்று சிலர் அலட்சியமாகப் பேசக்கூடும். உண்மை என்ன?

இன்றைக்கும் நாம் பல அசுரர்களைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம். சோம்பல் என்ற அசுரன்; கவனம் சிதறல் என்ற ராட்சசன்; பொறாமை, கோபம் போன்ற துர்குணங்கள் என்ற அரக்கன்... இப்படி பலர். இவர்கள் எல்லாம் பல ரூபங்களில்தான் வருகிறார்கள். டி.வி., சினிமா, வீடியோ கேம்ஸ் போன்ற பல வடிவங்களில் வந்து நம் கவனத்தைச் சிதற அடித்து சோம்பலை வளர்க்கிறார்கள். துர்குணங்களுக்கு உரமிடுகிறார்கள். பல்வேறு ரூபங்களில் வரும் இவர்களை கண்ணனைப் போலவே நாம் இனம் கண்டு வெற்றி கொள்ள வேண்டும்.

நண்பர்களாகச் சிலர் விளங்குவார்கள்; வேறு சிலர் நண்பர்களாக நடித்து நம்மைத் தவறான பாதைக்கு இழுப்பார்கள். அத்தகைய நட்பை முறித்துக் கொண்டுவிட வேண்டும். இதைத்தான் பாகவதக் கதைகள் உணர்த்துகின்றன.

- ஆசிரியர்

கோகுலம் - ஈகிள் டயரி இணைந்து நடத்திய போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அவற்றிலிருந்து சிறப்பாக எழுதிய 50 பேர் டயரி பரிசைப் பெற்றனர். அவற்றில் சிலரின் அனுபவங்கள் இங்கு பிரசுரமாகியுள்ளன.

டயரி அனுபவங்கள்

டைரி வாங்கியதும் அதன் முதல் பக்கத்தில் நமது வாழ்க்கை இலட்சியத்தைப் பெரிதாக எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். தினமும் டைரியைப் பிரிக்கும்போது அந்த வாக்கியம் நம் கண்ணில் பட்டால் நம் எண்ணம் இன்னும் வலுப்பெறும்.

படித்ததும் பிடித்துப் போய் மனத்தில் தங்கிவிட்ட பொன்மொழிகள் இருந்தால் அதைப் பக்கத்தின் மேல் எழுதி வைக்கலாம்.

அன்று நடந்த மகிழ்வான அல்லது மனத்தைப் பாதித்த சம்பவங்களைச் சுருக்கமாக எழுதலாம்.

உலகம் ஒவ்வொரு நாளும் ஒரு பாடத்தையாவது நமக்குக் கற்றுத் தரும். அதற்குப் பெயர்தான் அனுபவம். அதை அடுத்ததாக எழுதி வைத்துக் கொள்ளலாம். இன்று இது சின்ன விஷயமாக இருந்தாலும் நாளை இது வரலாறு ஆகும்.



டைரி பெரும்பாலும் உழைப்பு, முன்னேற்றம், வெற்றி என்று பாசிடிவ் திங்கிங் கொண்ட கருத்துக்களாக நிறைந்து இருக்கட்டும்.

- இரா. பாலமுரளி,
பதினோராம் வகுப்பு, தாரமங்கலம்.

என் தாத்தா, அப்பா எல்லோருமே எழுதின டைரியைப் படித்திருக்கிறேன். தாத்தா எழுதிய டைரியில் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள். தபால் செலவு, பொருள்களின் வரவு செலவு கணக்குகள், போக்குவரத்து செலவு என்று இருந்தது. அவர்கள் ஒரு ஹிந்தி பண்டிட். அவர்கள் காந்தியடிகள் வாழ்ந்த காலத்தின் நிகழ்வுகள் எல்லாம் எழுதி இருந்தார்கள். அவர்கள் காலணா, அரையணா புழக்கத்தில் வாழ்ந்தவர்கள். எனவே அவர்கள் எழுதிய டைரி மூலம் என்னால் பல விஷயங்களை அறிய முடிந்தது. என் தாத்தா எழுதிய டைரியில் என் அம்மாவுக்குக் கோகுலம் வாங்கி கொடுத்து இருக்கிறார்கள். அதன் விலை 90 காசு. இப்படி பல விஷயங்கள். நான் எழுதிய டைரியையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அன்றைய நிகழ்வுகளை இரவில் படுக்கப் போகுமுன் டைரியில் எழுதி விடுவேன். நான் பத்திரிகை, டி.வியில் பார்த்தது, பள்ளியில் படித்தது, ஆசிரியரின் அறிவுரை, நண்பர்களிடம் அடித்த அரட்டை, அம்மா, அப்பாவிடம் வாங்கிய பரிசு, அடி, திட்டு, பாராட்டு, தம்பியிடம் போட்ட சண்டை என பல நிகழ்ச்சிகளை எழுதுவேன். அப்போது எனக்கு வயது 13. ஆனால் இன்று என் டைரியைப் படிக்கும்போது கொஞ்சம் வித்தியாசம். வயதுகூட கூட எழுத்திலும் தரம் கிடைத்துள்ளது.

- எம். காமாக்ஷி பிரியதரிசினி,
பன்னிரண்டாம் வகுப்பு, எடப்பாடி.

எங்கள் குடும்ப விழாக்கள் விபரம், திருமணம், பிறப்பு, இறப்பு ஆகியவையும் எழுதுவேன். எனது தாயார் மற்றும் உறவினர்கள் ஏதாவது நிகழ்ச்சியின் தேதி தெரிய வேண்டுமானால் என்னைத்தான் தேடி வருவார்கள்.

இடையிடையே பொன்மொழிகள், நான் எழுதிப் பார்க்கும் கவிதைகள்கூட இருக்கும். விடுமுறை நாட்களில் மிகவும் போரடித்தால்

நான் எழுதிய டைரிகளை எடுத்துப் படிப்பது வழக்கம். அதில் எனது லட்சியங்கள் (கேட்டால் சிரிக்கும் வகையில் கூட உள்ளது.) பற்றியும் எழுதியுள்ளேன். சிலவற்றை நிறை வேற்றியுள்ளேன்.

- எஸ். ஸ்டாலின் சீனிவாசன்,
ஒன்பதாம் வகுப்பு,
சி.எம். மேல்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி.



நமக்கு ஆங்கில மொழி முக்கியமாதலால், தினம் இரு புதிய வார்த்தைகளாவது கற்றுக்கொண்டு அவற்றைக் குறித்துக் கொள்ளலாம். குறைந்தது வாரமொருமுறை திரும்பப் படிக்கும்போது ஸ்பெல்லிங்களுடன் நிறைய வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள உதவியாக இருக்கும். ஆங்கில அறிவும் பலப்படும். ஹிந்தி கற்றுக் கொள்ளவும் இம்முறை பயன் படும். நம் கைப்பட நல்ல செய்திகளை எழுதி, அவற்றை அவ்வப்போது படிக்கும் போது அவை நன்கு மனத்தில் பதிந்துவிடும். மாணவர்களின் பிற்கால வெற்றிகரமான வாழ்க்கைக்கு வழி வகுக்கும்.

அத்துடன் தெரிந்தோ தெரியாமலோ புரிந்த தப்புகளையும் அதனால் அடைந்த பாதகங்களையும் எழுதி வந்தால், மீண்டும் அவற்றைச் செய்ய நம் மனதே நம்மைத் தடுத்துவிடும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் நம் செய்கைகளில், நடவடிக்கை களில் தெளிவான, ஆக்கபூர்வமான மாற்றம் நிகழும்.

- எச். முகமது சமீர், ஏழாம் வகுப்பு,
டி.பி.டீ.ஆர் மேல்நிலைப்பள்ளி,
மயிலாடுதுறை.

இந்திய மற்றும் உலகத் தலைவர்கள் பதவியேற்பு, அவர்கள் மரணம், இரு நாடு களுக்கிடையே ஏற்படும் ஒப்பந்தம், விளை யாட்டுப் போட்டிகளின் முடிவுகள் போன்ற சம்பவங்களையே எனது டயரியில் எழுதுவது வழக்கம்.

அவ்வாறு எழுதுவதற்கு எதுவும் நிகழ்ச்சி இல்லையென்றால் அந்தத் தேதிக்கு உண் டான பக்கத்தில் பத்திரிகை மற்றும் வார, மாத இதழ்களில் படிக்கும் தமிழ் மற்றும் ஆங்கில பொன்மொழிகளை எழுதி வைத்து விடுவேன். அவ்வாறு பொன்மொழி எதுவும் கிடைக்கவில்லையென்றால் திருக்குறள் ஒன்றை எழுதிவிடுவேன்.

பின்னர் வார விடுமுறை நாட்களில் எனது டயரியை முதல் பக்கத்திலிருந்து படித்து வருவேன். இதனால் எனக்கு உலகம் மற்றும் பொது அறிவு மேம்படுவதோடு பள்ளி கட் டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கான விஷயங்களும் கிடைக்கின்றன.


— எஸ். அனிதா,
பன்னிரண்டாம் வகுப்பு,
சென்னை - 92.


'சுவரோடாயினும் சொல்லியழு' என்ற பழமொழிக்கிணங்க ஒவ்வொரு மனிதனும் தனது சுக துக்கங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள முடியாதபோது நம் மன அழுத்தங் களை மனம் திறந்து பேசுவதைப் போல நாட் குறிப்புகளை எழுதி வைக்க வேண் டும்.

பிறருக்குச் சொல்லக்கூடாது என குறிப்பிடும் இரகசியங்களைக் காலப்போக்கில் அவை பிறருக்குத் தெரிந்தாக வேண்டும் என நம் மனம் உணரும் செய்திகளை நமக்கே உரிய நாட்குறிப்புகளில் பதிவு செய்து வைத் துக் கொள்ளலாம்.

நிறைய வேலை பளு உள்ளவர்களுக்கு, பொறுப்புகள் உள்ளவர்களுக்கு மறதி என்பது இயல்பாகி விடுகிறது. அத்தகையோருக்கு நாட்குறிப்புகள் அன்றைய தேதியில் ஆற்ற வேண்டிய பணிகளைப் பட்டியலிட்டு கூறும் கருவியாய் விளங்குகின்றது. எனவே நமது அன்றாட நிகழ்ச்சிகளை நாட்குறிப்பில் எழு திப் பழக வேண்டும்.

- ஞா. ப்ரீதி,
10ம் வகுப்பு, 'ஈ' பிரிவு
ஜீ.ஆர்.எப்.பெ.மே. பள்ளி, திருவாரூர்.


மகிழ்ச்சியின் ரகசியம்!
கதை: சாரதா படம்: மகேஸ்
செண்பகக் காட்டில் அணில் ஒன்று மகிழ்ச்சியாக விளை யாடிக் கொண்டிருந்தது.
அந்த வழியே வந்தது ஓநாய்.
காலை யிலிருந்து நல்ல பசி. இந்த அணிலையாவது சாப்பிட லாம்.
அணில் தவறி மரத்திலிருந்து கீழே விழுந்தது.
ஹா...ஹா... நீயாக வந்து மாட்டிக் கிட்டாயா?
என்னை விட்டுவிடு.
என்னால் முடியாது. அகோரப் பசி எனக்கு.
சரி. என்னைச் சாப்பிடுவதற்கு முன் ஒரு கேள்வி.


சரி, கேட்டுத் தொலை.
நான் எவ்வளவு சந்தோஷமாக, ஜாலியாக இருந்தேன். நீ அப்படி எப்பொழுதும் சந்தோஷமா இருந் ததுண்டா?
யோசித்தது ஓநாய்.
நான் பார்க்கும்பொழு தெல்லாம் அணில் சந்தோஷமாக இருக்கும். ஆனால் நான் அப்படி இல்லையே?
உண்மைதான். உன்னைப் போல் சந்தோஷமாக நான் இருந்ததில்லை. நீ மட்டும் எப்படி?
நான் அந்த ரகசியத்தைச் சொல்கிறேன். அதற்குப் பதில் என்னை உயிருடன் விட்டு விட வேண்டும்.
அணில் சொல்வதைக் கேட்டால் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கலாமே!
ஓநாய் அணிலை விட்டது.
ஓநாய் அண்ணா! நீ எப்பொழுதும் மற்றவர்களைத் துன்புறுத்தி, கொல்ல நினைக்கிறாய். நான் யாருக்கும் தீங்கு நினைப்பதில்லை. இதுதான் ரகசியம்.
நன்றி தம்பி.

INFORMATIVE, EDUCATIVE, ENJOYABLE
RUSH TO GET YOUR COPY!

COVER STORY



ARCHERY

- the sport for all



A CRICK IN THE NECK

- a Jayabalan Story

THE CURSE OF TUTANKHAMEN



WELCOME TO THE PANKAJ AND JANU SHOW

- an insight into puppetry

Stories + Picture Stories + Articles + Serial + In the Wild
and many more

GOKULAM

The monthly magazine for children

FEBRUARY 2002 **Rs.6/- ONLY**

47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097

300 விக்கெட் சாதனையாளர்!

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையே மூன்று டெஸ்ட் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இதில் முதல் டெஸ்ட்டில் இந்தியா வென்றது. இரண்டாவது டெஸ்ட் டிரா ஆனது. பெங்களூரில் நடந்த மூன்றாவது டெஸ்ட்டும் மழையால் டிரா ஆனது. எனவே இந்தியா 1 - 0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது. இந்த இரு அணிகளுக்கும் இடையேயான ஒரு தினப் போட்டிகள் நடைபெற உள்ளன. அவற்றையும் வெல்லுமா இந்தியா?

2001ஆம் ஆண்டில் டெஸ்ட் போட்டியில் 1000 ரன்களைக் குவித்த இந்தியர் என்ற பெருமையை டெண்டுல்கர் பெற்றிருக்கிறார். உலக அளவில் மொத்தம் 5 பேர் 1000 ரன்களை இந்த ஆண்டில் மட்டும் எடுத்துள்ளனர்.

கேப்டன் கங்குலி தலைமையில் இந்திய அணி மூன்று டெஸ்ட் தொடரை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. முதலில் ஜிம்பாப்வேயை 1 - 0 என்ற கணக்கிலும், ஆஸ்திரேலியாவை 2 - 1 என்ற கணக்கிலும் தற்போது இங்கிலாந்தை 1- 0 என்ற கணக்கிலும் இந்தியா வென்றுள்ளது.



* டெண்டுல்கர்

சாதித்தார் கும்ப்ளே!

இங்கிலாந்து அணியின் மேத்யூ ஹோகார்ட் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் 300வது விக்கெட்டைக் கைப்பற்றி, சாதனை படைத்தார் அனில் கும்ப்ளே.

டெஸ்ட் வரலாற்றில் 300 விக்கெட் வீழ்த்திய 18வது ஆட்டக்காரர் கும்ப்ளே. இந்தியாவில் கபில்தேவுக்குப் பின் இரண்டாவது இந்தியர்.

1990ஆம் ஆண்டில் 19வது வயதில் மான்செஸ்டர் நகரில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் அறிமுகமானார் கும்ப்ளே. தனது 66வது டெஸ்ட் ஆட்டத்தில் 300வது விக்கெட்டை எடுத்திருக்கிறார்.

இதுவரை ஒரே டெஸ்ட்டில் 10 விக்கெட்களுக்கு மேல் 3 முறையும், ஓர் இன்னிங்ஸில் 5 விக்கெட்களுக்கு மேல் 18 முறையும் கும்ப்ளே எடுத்துள்ளார்.

1999ஆம் ஆண்டு டெல்லியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்களை வீழ்த்தியிருக்கிறார். கும்ப்ளே மேலும் சாதனை படைத்து இந்தியாவுக்குப் பெருமை தேடித் தர வாழ்த்துவோம்.

கும்ப்ளே போஸ்டர் 40ஆம் பக்கத்தில்.



* கங்குலி



முதல் பரிசு: **தி. ஆர்த்தி,** ஏழாம் வகுப்பு,
ஜேஸீஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, சிவன்மலை, காங்கேயம்.

ஜனவரி இதழில் 'டயனோசர்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். ஜூராசிக் பார்க் அளவிற்கு விதவிதமான டயனோசர்கள் வந்து சேர்ந்துவிட்டன. அவற்றில் பரிசு பெற்ற சில டயனோசர்கள் இங்கே...




மூன்றாம் பரிசு:

த.இரா. பாரதி,
பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ வரதம் அரசினர்
பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
வேணுகோபாலபுரம்,
கடலூர்.

ஜூராசிக் பார்க்

ஓவியப் போட்டி முடிவுகள்




இரண்டாம் பரிசு: **எஸ். சரண் சந்தர்,**
மூன்றாம் வகுப்பு, புனிதமேரி மெட்ரிக் பள்ளி, மதுரை.

ஆறுதல் பரிசு: **எல். சேகர்,**
பன்னிரண்டாம் வகுப்பு,
ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருவரங்கம், திருச்சி மாவட்டம்





ஆறுதல் பரிசு: **எஸ். சரத்சந்தர்,**
ஐந்தாம் வகுப்பு,
புனிதமேரி மெட்ரிக் பள்ளி, மதுரை.



புதிய பகுதிகள்!

வலையில் சிக்கியவை, வியக்க வைக்கும் விளையாட்டு உலகம் என்ற இரண்டு புதிய பகுதிகளும் மிகவும் நன்றாக இருந்தன.

- த. சிவபாரதி, மல்லிபாளையம், ஈரோடு

பணிவு...

'வெற்றிக்கு வழி' என்ற கதை உழைப்பில் நம்பிக்கை வைக்க வேண்டிய அவசியத்தையும் பொறுப்புணர்வையும் வலியுறுத்தியது. அதே சமயம் 'பதவிக்கு வரும்போது பணிவு வர வேண்டும்' என்பதைக் குன்றைக் குடையாய் எடுத்த கண்ணனின் கதை புரிய வைத்தது.

- முகதி. சுபா, பாளையங்கோட்டை

கட்டுரை எழுத...

கோகுலத்தின் தீவிர வாசகியான எனக்கு 'அக்னிக் குஞ்சுகள்' தொடர்கதை மிகவும் பிடித்திருக்கிறது. சென்ற ஆண்டு வெளிவந்த 'உங்கள் எதிர்கால வழிகாட்டி' பகுதி மிகவும் பயனுள்ளதாக இருந்தது. கோகுலத்தை ஐந்து ஆண்டுகளாகப் படித்து வருவதால் என்னால் சிறப்பான முறையில் தமிழில் கட்டுரை எழுத முடிகிறது.

- பா. கனிமொழியாள், மலேசியா

அசந்தோம்!

ஜனவரி மாத இதழில் வெளியான 'தண்ணீருக்குள் மூழ்கிய காகிதம் நனையுமா?' என்பதைப் படித்து, செய்து பார்த்தோம். வீட்டில் உள்ளவர்கள் அசந்து விட்டார்கள். அடுத்த இதழில் என்ன வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். நெருப்புக் கோழியைப் பற்றிய தகவல்கள் நன்றாக இருந்தன.

- சி. அனுசுயா, இராமசமுத்திரம், வந்தவாசி.

நன்றி!

'தமிழ் நாட்டு பெர்னாட்ஷா' என்ற தலைப்பில் அறிஞர் அண்ணா பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ள வைத்ததற்கு நன்றி.

- ந. சுதாகர், ஏழாம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, புள்ளபூதங்குடி, தஞ்சை மாவட்டம்

டயரி

எங்களைப் போன்ற மாணவர்களுக்குப் போட்டி வைத்து அருமையான டயரிகளை வழங்கிய கோகுலத்துக்கும் - ஈகிள் டயரி நிறுவனத்துக்கும் எங்கள் நன்றி... நன்றி...

- சு. ஸ்டாலின் சீனிவாசன் - தூத்துக்குடி

வீரபாண்டியன் - சிறுமுளை

ஆர்.அனிஷ் ராஜா - சென்னை

ஜெ. பிரமோத் - மன்னார்குடி

கே.ஜெகதீஷ் - மதுராந்தகம்.

ஓவியப் போட்டி

டக்... டக்... என்று நடந்து செல்லும் குதிரைகளைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : குதிரை. குதிரை ஓடலாம், நடக்கலாம், வண்டி இழுக்கலாம், ஆட்களை ஏற்றிச் செல்லலாம். எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் படம் வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முழு முகவரியைத் தரவும். கடைசி தேதி 1.02.2002.

ஒவ்வொரு மாதமும் போட்டி வைத்து 2 கைக்கடிகாரங்களைப் பரிசாக உங்களுக்கு வழங்கி வருகிறோம். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. சரியான






ஒவ்வொன்றும் ரூ.500/- மதிப்புள்ள 2 கைக் கடிகாரங்கள் பரிசு!

விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 20.2.2002. உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும்.

இந்த மாதப் போட்டி

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு நடனம் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. கீழே ஆறு நடனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை எந்த மாநிலங்களுக்குச் சொந்தமானவை என்பதைக் குறிப்பிட்டு எழுதி அனுப்புங்கள்.

1. ஒடிசி ______________________
2. குச்சுப்புடி ______________________
3. மோகினி ஆட்டம் ______________________
4. பாங்கரா ______________________
5. யக்ஷகானம் ______________________
6. தாண்டியா ______________________



ஆசிரியர், கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

"நான் தந்திரக்காரனா?"

ஹாய் ஃபிரண்ட்ஸ்! புது வருடத்தின் முதல் மாதத்திலேயே உங்களையெல்லாம் சந்திக்கணும்னு நினைச்சேன். முடியலை. ஆனால் இந்த பிப்ரவரி மாதம் மட்டும் என்ன சாதாரணமானதா? கோகுலத்தின் பிறந்த நாள் மாதமாயிற்றே! சரி... சரி... என் பெயரைச் சொல்லாமல் நான் பேசிக் கொண்டே போனால் நன்றாக இருக்காது.

ஒருபுறம் 'அறிவுடையவன்', என் முகத்தில் விழித்தால் நல்லது என்று எனக்குப் பெருமை தேடி தருகிறீர்கள். மற்றொரு புறம் 'ஏமாற்றுக்காரன்', 'தந்திரக்காரன்' என்று என்னை இகழ்ந்தும் பேசுகிறீர்கள். உங்களை என்னால் புரிந்து கொள்ளவே இயலவில்லை. நான் யார் என்பதை நீங்கள் கண்டுபிடித்திருப்பீர்களே! நான் தான் காகத்தை ஏமாற்றி வடையைத் தூக்கிக் கொண்டு ஓடிய நரி.



முதலில் ஓர் உண்மையை விளக்கி விடுகிறேன். எங்களுக்கு என்று ஸ்பெஷலான அறிவோ, தந்திரமோ கிடையாது. ஒவ்வொரு பிராணியும் இரையைப் பிடிக்கவும், எதிரியிடமிருந்து தப்பவும் மேற்கொள்ளும் முயற்சியைப் போலவே நாங்களும் முயற்சிக்கிறோம். அவ்வளவுதான்! நான் அறிவுள்ளவனாக இருந்தால் ஊளையிட்டு என் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுப்பேனா?

'ஊளை' என்றதும்தான் நினைவுக்கு வருகிறது. நான் எதற்காக ஊளையிடுகிறேன் தெரியுமா? என்னைச் சுற்றி அக்கம் பக்கத்திலுள்ள எனது உறவினர்களின் நலனை அறிந்து கொள்வதற்காகத்தான். அவர்களும் என் ஊளைக்கு எதிர் ஊளையிட்டுத் தங்கள் நலனைத் தெரிவிப்பார்கள்.

எனக்கு போர் அடித்தால் தண்ணீரில் நீந்த ஆரம்பித்து விடுவேன். இதுதான் என் ஹாபின்னு கூடச் சொல்லலாம்.

என் உருவத்தைப் பார்த்தாலே நான் எந்த இனத்தைச் சேர்ந்தவன் என்று உங்களுக்குத் தெரிந்து விடும். நீங்கள் நினைப்பது சரிதான். நான், ஓநாய் எல்லாம் நாய் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

நான் சொல்வதைக் கேட்டுப் பயந்து விடாதீர்கள். நாய்க்கு வெறி பிடிப்பது போல் எங்களுக்கும் வெறி பிடிப்பதுண்டு.

உங்களுக்கு எல்லாவித உணவுகளும் பிடிக்கும் என்று சொல்ல முடியாது இல்லையா? ஆனால் எனக்குப் பிடிக்காத உணவே கிடையாது. கிடைத்ததையெல்லாம் சாப்பிடுவேன். அதிலும் நண்டு என்றால் உயிர். நண்டை எப்படி பிடிப்பேன் தெரியுமா? நண்டின் வளைக்குள் என் வாலை மெதுவாக விட்டு ஆட்டுவேன். அது என் வால் என்பதை அறியாத நண்டு வாலை பிடித்துக் கொள்ளும். உடனே வாலை வெளியில் எடுத்து நண்டை உணவாக்கிக் கொள்வேன். நாயைப் போலவே என்னுடைய வாலின் தன்மையை வைத்து என் மனநிலையைப் புரிந்து கொள்ள முடியும்.

எங்கள் இனத்தில் ஆணும் பெண்ணும் சமமாகக் குடும்பத்தை நிர்வகிப்போம். இருந்தாலும் ஆண்களுக்கே குடும்பப் பொறுப்பு அதிகம். குட்டிகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொள்வோம்.

எங்களில் பல வகைகள் உண்டு. உருவத்திலும் சில நடவடிக்கைகளிலும் சிறு மாற்றம் தெரியும்.

சிறுத்தைதான் என்னுடைய எதிரி. சில நேரங்களில் உங்களைப் போன்ற மனிதர்களும் தான்!

அப்புறம் இன்னொரு விஷயம். 'என் முகத்தில் விழித்தால் நல்லது' என்று யாரோ தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி எந்த விசேஷ சக்தியும் என்னிடம் கிடையாது.

நான் உங்களைச் சந்திக்க வந்த காரணத்தை மறந்து விட்டுச் சுயபுராணம் பாடிக் கொண்டிருக்கிறேனே! நாளை என் குட்டிகளுக்கு முதல் பிறந்த நாள். விமரிசையாக விழாவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அவசியம் வாருங்கள். இதில் எந்த ட்ரிக்கும் கிடையாது.

— எஸ். சுஜாதா





எங்கள் பள்ளியில் நடந்தது!

சமாளிப்பு...

பத்தாம் வகுப்பு படித்தபோது நடந்தது. கணித பாடவேளை நடந்து கொண்டிருந்தது. பக்கத்து மாணவன் கணக்கு நோட்டு எடுத்து வர மறந்துவிட்டதால் வெள்ளைத் தாளில் கணக்குகளை எழுதிக் கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஆசிரியர் ''ஏன் பேப்பரில் எழுதுகிறாய்?'' என்று கேட்டார். அதற்கு அவன் ''நோட்டில் ஒருமுறை எழுதுவதைவிட பேப்பரில் எழுதி அதை வீட்டில், நோட்டில் இன்னொரு முறை எழுதினால் நன்றாக மனதில் பதியும் சார்'' என்று சொல்லி சமாளித்தான். ஆசிரியர், ''நோட்டை மறந்து வந்துவிட்டு இப்போது சமாளிக்கிறாயா? வகுப்பில் நோட்டில் எழுது. வீட்டில் பேப்பரில் எழுது!'' என்று







சொல்லிவிட்டு, உட்கார வைத்தார்.

-எம். மகேஷ், சேலம்

ஸாரி டாக்டர்!

ஓவிய ஆசிரியர் வகுப்பில் இருந்தார். அப்போது திடீரென ஒரு மாணவிக்கு வலிப்பு வந்துவிட்டது. உடனே மாணவ-மாணவியரெல்லாம் சேர்ந்து அவளைத் தாங்கிப் பிடித்து காற்றோட்டமான இடத்துக்குக் கொண்டு வந்தனர். இதில் ஒரு மாணவன்தான் மிகவும் அக்கறை எடுத்து தண்ணீரெல்லாம் கொண்டு வந்து கூட்டத்தை விரட்டி, துடிதுடிப்போடு செயல்பட்டுக் கொண்டிருந்தான். இதற்கிடையில் அம்மாணவியின் கையில் யாரோ சிறு இரும்புச் சட்டத்தைக் கொடுத்திருந்தனர். இதைப் பார்த்த துடிப்பு மாணவன், ''உடம்புல குத்தி கிழிச்சிடப் போகுது. யாருடா தமிழ் சினிமாக்காரனாட்டம் முட்டாள்தனமா இரும்பு கொடுத்தது? படம் எடுக்கிறாங்க படம். டாக்டர்ங்க இதெல்லாம் டூப்புனு எவ்வளவுதான் சொன்னாலும் புரிஞ்சுக்க மாட்டேங்கிறீங்களே.'' என்று கோபத்துடன் பேசினான். ''ஸாரி டாக்டர், தெரியாமல் கொடுத்துட்டேன் இரும்பை. மன்னிச்சுக்குங்க.'' என்றது ஒரு குரல். பார்த்தால்... அது எங்கள் ஓவிய ஆசிரியர். எல்லோரும் சிரித்துவிட்டோம்.

- ராமகிருஷ்ணன், புதுக்கோட்டை

புது மனசு

ஒரு நாள் எங்கள் வகுப்பாசிரியர் ஒரு பெரிய செய்யுளைப் புத்தகத்தில் காட்டி இதை அனைவரும் 100 தடவை அரையாண்டு விடுமுறையில் எழுதி வர வேண்டுமென்று கூறினார். அன்று மாலை எங்கள் லீடர் அவர் அறைக்குச் சென்று, ''லீவில் அரையாண்டுத் தேர்வு கேள்வித் தாளுக்குரிய விடைகள் எழுத வேண்டியிருப்பதால் இதை வேண்டாமென்று கூற வேண்டும்'' என்றான். அவரும் சரியென்றார்.

அடுத்த நாள்

இரும்பைக்

வகுப்பில், ''உங்கள் லீடர் கேட்டுக் கொண்டதால் நான் என் மனதை மாற்றிக் கொண்டேன்'' என்றார் ஆசிரியர். உடனே ஒரு குறும்புக்கார

மாணவன் எழுந்து, "உங்க புது மனசு பழைய மனசைவிட நல்லா இருக்குது சார்'' என்றான். உடனே வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது. பிறகு அவன் மன்னிப்பு கேட்டு விட்டு வகுப்பை கவனிக்க ஆரம்பித்தான்.


- எம். வினோத், விருத்தாச்சலம்

செல்லாத காசு

அன்று தமிழ் பாடவேளையில் ஆசிரியர் தமிழ் இலக்கணத்தில் அசை பிரித்தல் பற்றி பாடம் நடத்தினார். நடத்தி முடித்த பின்னர் அனைவருக்கும் புரிந்து விட்டதா என்று தெரிந்து கொள்வதற்காக ஒரு மாணவனிடம் 'காசு' என்ற சொல்லைப் பிரித்துக் காட்டு மாறு சொன்னார். விடை தெரியாத மாணவன் யோசிப் பது போல பாவனை







செய்து கொண்டு நின்றான். அதற்குள் ஒரு குறும்புக்கார மாணவன் "காசைப் பிரித்தால் செல்லாது போய்விடும்'' என்று மெதுவாகக் கூறினான். அதைக் கேட்டு விட்ட ஆசிரியர் அதை உரக்கச் சொல்லிச் சிரிக்க வைத்தார்.

- அ. சுபா, ஒன்பதாம் வகுப்பு, நியூ இந்தியா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சேலம்.

கொடுத்தது யார்?

குறள்

அன்று தமிழ்ப் பாடவேளை. ஆசிரியர் வகுப்பிற்கு வந்து சிறிது நேரம் பாடம் நடத்தி விட்டு, ஒரு மாணவியை எழுப்பி, "திருக்குறள் படித்துவிட்டு வந்தாயா?'' என்று கேட்டார். அம் மாணவியோ, ஆசிரியர், முந்தைய நாள் திருக் குறள் நடத்தியபோது வரவில்லை. அவ்வாறிருந் தும், "சொல்றேன் சார்!'' என்றதும், ஆசிரியர், சொல்லச் சொன்னார். உடனே, "இனிய வுள வாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந் தற்று'' என்று திருக்குறளில் உள்ள வேறு அதிகாரத்தைக் கூற குழம்பிப் போனார் ஆசிரியர் "என்னம்மா! நீ வேறு அதி காரத்திலுள்ள ஏதோவொரு குறளைக் கூறுகிறாய்?'' என்றார். அம்மாணவி, "ஐயா! திருக்குறள் படித்தாயா? என்று கேட்டீர்கள். நான் என் ஊரிலி ருந்து பள்ளிக்கு வரும்போது பஸ்ஸில், திருக்குறள் படித்தேன் ஐயா! அதைத்தான் கூறினேன்'' என்றதும் ஆசிரியர் உட்பட வகுப்பே சிரித்தது.


- ஏ.எல். பாத்திமா, காரைக்கால்

ஒலியா?

அறிவியல் பாடவேளை. ஆசிரியர் 'வேதி யியல்' பிரிவில் பழுப்புவளைய சோதனை நடத்திக் கொண் டிருந்தார். "ஸ்பிரிட் விளக்கால் ஆய்வுக் குழாயைச் சூடேற்றும் போது சடசடவென 'ஒலி' உண்டாகும்'' என்றார். உடனே என் தோழி எழுந்து " 'ஒளி' எப்படி உண்டாகும்? 'சத்தம்'தான் உண்டாகும்'' என்றாள். அதற்கு ஆசிரியர் நான் 'ஒளி'யைச் சொல்லவில்லை. 'ஒலியைச் சொன்னேன்' என்று கூறியபோது வகுப்பறையே சிரிப்பில் மூழ்கியது.

- வே.சுபஸ்ரீ, ஒன்பதாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்.

செய்துபாருங்கள்



கைரேகைகள்

உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் ஒரே மாதிரி கைரேகைகள் இருக்குமா? இதற்கான விடையை ஒரு சிறிய சோதனை மூலம் நாமே செய்து பார்த்து தெரிந்து கொள்ளலாம். அதற்கு முன்பு உங்கள் கைகளை நன்றாகக் கழுவி விடுங்கள்.

எப்படி செய்வது?


1. பேனா மையை எடுத்து லேசாகக் கட்டை விரலில் தடவுங்கள்.
2. வெள்ளைக் காகிதத்தின் மேல் கைரேகையைப் பதியுங்கள்.
3. காகிதத்திலிருந்து விரலை மெதுவாக எடுத்து விடுங்கள்.

இப்படி குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். பிறகு பதிந்த கைரேகைகளை உற்று நோக்குங்கள். எல்லா கைரேகையும் ஒரே மாதிரி இருக்கிறதா? அல்லது யாராவது இருவருடைய கைரேகைகள் ஒத்துப் போகின்றனவா?


உலகில் எந்த ஒரு மனிதனுடைய கைரேகையும் இன்னொரு மனிதனின் கைரேகையுடன் ஒத்துப் போகாது. இதனால்தான் குற்றவாளிகளைச் சுலபத்தில் கண்டுபிடிக்க முடிகிறது. இரட்டைப் பிறவிகளின் கைரேகைகள்கூட ஒத்துப் போகாது.

உலகில் முக்கிய மூன்று விதமான கைரேகை வடிவங்களைச் சாதாரணமாகப் பார்க்கலாம். இங்குள்ள மூன்று விதங்களிலிருந்து உங்கள் கைரேகை எந்த வகையைச் சேர்ந்தது என்று ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

வளைவு



நீள்வட்டம்



வட்டம்



Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345628;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

யானை முயலை அடைய எந்த வழியில் செல்ல வேண்டும்?




விடை : 2



''எங்க வீட்டுல எலித் தொல்லை அதிகமாயிடுச்சு!''
''ரியலி?''
''ரியலி இல்லை. சுண்டெலி!''

வரைந்து பழகுங்கள்!



பிருந்தாவனம்



கன்றுக் குட்டிக்குக் கண்மணி பாப்பா தோழியா!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2001*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

